போன் நெ. 15. விலை 2 அணா. REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 30—8—53 | இதழ் 9

★ அத்தானுக்கு, அமுதவல்லி! ★

[அண்ணல்]

★

அன்புள்ள அத்தான்!

தங்களின் இன்பமுகம் கண்டு 42 நாட்கள், நகர்ந்துவிட்டன. 'சென்று வருகிறேன், செல்வமே!' என்று 15ந் தேதி காலை, என்னிடம் தாங்கள் விடை பெற்றுச் சென்ற போது, தாங்கள் சென்ற திக்கைப் பார்த்தவண்ணம், நெடு நேரம் நின்றிருந்தேன். அத்தை வந்து அதட்டினார்கள் —'அமுதா, நீ என்ன அசடா?' என்று. உங்கள் வாயாலும் அந்த 'அசடு' என்ற வார்த்தையைக் கேட்டிருக்கிறேன்- அடிக்கடி. ஆனால், அப்போதெல்லாம், நான் அடையாத வெட்கம் என்னைச் சூழ்ந்துகொண்டது. தாங்கள், 'அசடே!' என்றழைப்பீர்கள்— அன்புக்காக. ஆனால், அத்தை உண்மையாகவே, என்னை, 'அசடு' என்று சொன்னார்கள். தாய்நாட்டின் சேவைக்காக தன் மகன் பணி புரிவது கண்டு, அவர்களுக்குமட்டும்தானா, ஆனந்தம இருக்கும்? அவருக்குத் தாங்கள்மகன்! எனக்கு மணாளனன்றோ, நீங்கள்!! அறப் போரிலீடுபடச் செல்லும் தங்களை, என் ஆசைக் கண்களைக் காட்டி, தடுத்துவிடுவேனோ?—என்ற பயம் போலிருக்கிறது, அத்தைக்கு! அதனால்தான், என்னை அதட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கென்ன தெரியும், அன்று இரவு, நீங்களும் நானும், அறப்போராட்டத்தைப் பற்றி, விடிய விடிய பேசிக்கொண்டிருந்தது?

அத்தான்! தனிமையில், சர்க்கார் கட்டியிருக்கும் சிறைக்குள் அடைபட்டுக்கிடக்கும் தங்களுக்கு, 'அந்த இரவு' நினைவு இருக்கிறதா? என்னிடம் விடை பெறுவதற்கு, எவ்வளவு தூரம் சுற்றி வளைத்துப் பேசினீர்கள்—'எங்கே, இவள், போகவிடுவாளோ? என்னென்ன கூறி, தடை செய்வாளோ? கருவில் வளரும் அன்புச்செல்வத்தை, அஸ்திரமாக்குவாளோ? கண்ணீர் அம்புகளை வீசுவாளோ?'' என்ற எண்ணத்தில் தானே. அவ்வளவு தூரம், தயங்கித் தயங்கிப் பேசினீர்கள்? தாங்கள், 'அறப்போருக்குச் செல்கிறேன்' என்று கூறியதும், நான் என்ன செய்தேன்!...எழுத வெட்கமாயிருக்கிறது, அத்தான்! உண்மையில், என்னை அறியாமலேயே, ஆனந்தமடைந்தேன். உங்களுக்குத் தெரிந்ததுதானே, என் அன்னை, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது, கைக்குழந்தையாகிய என்னோடு, சிறை புகுந்த கதை? நான் கேட்ட தாலாட்டே, 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை! எம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!' என்பதுதானே! இதை, அத்தை மறந்துவிட்டார்கள்போலிருக்கிறது. அவர்களுடைய மகன் விடுதலைப் போரிலீடுபட்டு, தாக்கி வரும் துன்பமும் இன்பமும் அவருக்குமட்டும்தானா, சொந்தம்—எனக்கு இல்லையா? இதை எண்ணியபடியே, அன்று முழுமையும் இருந்தேன்! அந்தி சாயும் நேரத்தில், மாமா வந்தார்—அத்தையும் மாமாவும் இரகசியம் பேசிக்கொண்டார்கள். தாங்கள் அறப்போரிலீடுபட்டது—போலீசார் தங்களைத் தாக்கியது—லாரியில் இழுத்துச் சென்றது—சிறைக்குள் போட்டுப் பூட்டியது—இத்தனையையும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள் இதில், ஒளிவு மறைவு ஏன்? நான், சின்னஞ்சிறுசாம்! இந்தச்செய்தியை என்னால் தாங்கிக்கொள்ள முடியாதாம்!—இப்படியும் பேசிக்கொண்டார்கள். எனக்கு எப்படியிருந்தது தெரியுமா? என் காதலின் உடம்பில் தியாகத்தழும்பு ஏறிவிட்டது—என்று ஒருபக்கம், மகிழ்ச்சி. மற்றோர் பக்கம், அத்தையும் மாமாவும் என்னைக் கேலியும், 'மனிதப்பூச்சி' என்று எண்ணுகிறார்களே, என்று ஆத்திரம். நான் என்ன வெறும் சடலம்தானா, அத்தான்! எனக்கு மட்டும் உரிமையுணர்ச்சியில்லையா! தாங்கள் பிறந்து வளர்ந்த இத்தாயகத்தின் மடியில் தவழ்பவள்தானே, நானும்?

*

தாங்கள் அடிக்கடி, எனக்குப் படித்துக் காட்டுவீர்களே, விடுதலை வீரர்களின் கதைகள்! அவைகளை எடுத்துப் புரட்டியபடி உட்கார்ந்திருந்தேன். அந்த விடுதலை வீரர்

களின் படங்களையெல்லாம், பார்க்கும்போது, ஒவ்வொன்றிலும் தங்களையே கண்டேன். சதுப்பு நிலக் காடுகளில் பதுங்கித்திரிந்த மார்க்ஸ்-லெனின்; தன்னுடைய கொள்கைக்காக உயிரோடு கொளுத்தப்பட்ட லாட்டிமர்–ரிட்லி; நஞ்சு ஏந்தி உயிர் துறந்த உத்தமர் சாக்ரடீஸ்; கரிபால்டி–மாஜினி; இவர்கள் பட்ட கஷ்டங்களையெல்லாம் படிக்கும்போது, எனக்கே வெட்கமாயிருந்தது? அவர்கள் என்னென்ன கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள்' தத்தமது கொள்கைகளை நிலைநாட்டுவதற்கு! நாம் என்ன அத்தான், செய்துவிட்டோம்? நீங்கள் அடிக்கடி சொல்வீர்களே — பகத்சிங், ராஜகுரு, சுகதேவ்—அந்த மூன்று வீரர்களின் உருவத்தைப் பார்க்கிறேன். தூக்குமேடையில் தொங்கச் செல்லும்போதும், எவ்வளவு புன்சிரிப்புடன் செல்கிறார், அந்த பகத்சிங்! அத்தான், சாகுமுன், அந்த வீரன் தீட்டிய 'மரணசாசனம்' எனும் நூலை மூன்று முறை படித்துப் பார்த்தேன்! தாய் நாட்டைக் காப்பாற்றும் ஆர்வம் அவர்களை எந்தளவுக்குக்கொண்டு சென்றிருக்கிறது? 'சுதந்தரப் போர், ஓர் நீண்ட பயணம்' என்று ஒரு புத்தகத்தில், நீங்கள் எழுதியிருப்பது என் கண்ணில் பட்டது. ஆமாம்! அது ஓர், நீண்ட பயணம்தான்!! அதன்பாதையில், எத்தனை உத்தமர்களின் பிணங்கள் வீழ்ந்திருக்கின்றன—எதேச்சாதிகாரிகள் எவ்வளவு கொடுமைகளை வீசியிருக்கின்றனர். செக்கிழுத்த சிதம்பரம், வீதியில் பிணமான குமரன், ஆப்பிரிக்க மண்ணுக்கு இரையான தில்லையாடிக் கிழவி வள்ளியம்மை, திராவிடச் சீயங்கள் தாளமுத்து நடராசன், பட்டியல் பெரியதுதான், அத்தான்! பயணமும் மிக மிகப்பெரியதுதான்!

*

அண்ணி, கடிதம் எழுதியிருக்கிறார்கள், எனக்கு. தூத்துக்குடியில் துப்பாக்கியால் சுட்டார்களல்லவா? அதில், பெரிய அண்ணனுக்கு குண்டு பாய்ந்து, ஒரு கையை வெட்டிவிட்டார்களாம்! செய்தியைக் கேட்டதும், திடுக்கிட்டேன். நம் குழந்தை பிறந்தால், அதைஎன் அண்ணன் இனி, இருகையேந்தி தூக்கிக் கொஞ்ச முடியாது. எவ்வளவு பெரிய கொடுமை இது! ஆனால், அண்ணி, என்ன எழுதியிருக்கிறார்கள் தெரியுமா! 'உன் குழந்தையைத் தூக்க முடியாதே, அவருக்கு ஒரு கைதானே இருக்கும் என்று கவலைப்படாதே அமுதம். அவருடைய இன்னொரு கையாக நானிருக்கிறேன்' என்று. அண்ணியின் ஆர்வத்தைப் பார்த்தீர்களா அத்தான்? என் கணவர்தான் வீரர் என்று எண்ணினேன்! என் அண்ணி என்னை, வெற்றி கொண்டுவிட்டதை எண்ணி வெட்கப்படுகிறேன்! அங்கே பொழியப்பட்ட குண்டுமாரிக் கொடுமையையும் அண்ணி எழுதியிருக்கிறார்கள். அப்பப்பா...... அண்ணனின் கைப் போனதற்கே, என் உள்ளம் இவ்வளவு துடித்ததே. அந்தக் குண்டுமாரியில் உயிரை இழந்தவரது தங்கையின் கண்கள் எவ்வளவு நீரைக் கொட்டியிருக்கும். எனக்கே, அழுகை தாங்கமுடியவில்லை, அத்தான்! இறந்துபோனோரின் காதலியர் என்ன பாடுபட்டிருப்பார்கள்—தாங்கள் என்னைவிட்டுப் பிரிந்து சென்ற திக்கையே நெடுநேரம் பார்த்துக்கிடந்தேன், ஜூலை 15ந் தேதி.

நீங்களாவது, சிறையிலிருந்து திரும்பி வரப்போகிறீர்கள் எனும் தைரியம், இருக்கிறது எனக்கு. அது, அந்த அபாக்கியவதிகளுக்கு, ஏது அத்தான்? மஞ்சளும் குங்குமமும் மலரும் அற்ற விதவைகள் தானே, இனி! எவ்வளவு கொடுமை, இது? மணமில்லாத மலர்களாகிவிட்ட அந்தச் சகோதரிகளை எண்ணினால், மனம் குமுறுகிறது—இம் மாபாதகத்துக்குக் காரணமான அரசாங்கத்தின் கொடுமையை அழிக்க என்ன செய்யலாம்? என்று, சிந்தனைகள், உருவெடுக்கின்றன. அநீதியிழைத்த பாண்டியன் அவையில் போய் கண்ணகி கதறியதும், அவன் சிம்மாதனம் சிதைந்து—பொற்குடை கவிழ்ந்து—அவனும் செத்தானும்! சிலப்பதிகாரத்தில், இந்தக் கட்டத்தை, நீங்கள் படித்துப் படித்துக் காட்டியிருக்கிறீர்கள். அந்தக் கண்ணகியின் மரபு, கதறுகிறது, இன்று! ஆனால், அதைப் பற்றிக் கவலைப்படவில்லை, அத்தான், இன்றைய அரசாங்கம்!! அலங்கோலமாக வெளியே உலவிக்கொண்டிருக்கிறார்கள், மந்திரிமார்கள். மந்திரிகள் என்ன மரக்கட்டைகளா? அவர்களுக்குக் குடும்பம் என்று ஒன்று கிடையாதா—அண்ணன், தங்கையோடு பிறக்கவில்லையா — அம்மா, அப்பா கிடையாதா அவர்களுக்கு, ஏனிந்தக் கொடுமைத் தாண்டவம் செய்ய அனுமதிக்கிறார்கள்?', என்று அத்தை, மாமாவிடம் கேட்டார்கள் — மாமா, சென்னையில் நடைபெறும் 'ஐவர் வழக்கை', படித்துக் காட்டியபோது. அதில் ஒரு உயர்தர போலீஸ் அதிகாரி சாட்சியம் சொல்லியிருக்கிறார் — இப்போதுள்ள சர்க்கார் துப்பாக்கிப்பிரயோகம் செய்வது, நேரே மக்களைப் பார்த்துத்தானும்! 'ஆட்களைக் கொல்லச் சுடு! அநாவசியமாக வேட்டைக் கிளப்பாதே!', என்பதுதான், 'அகிம்சா' சர்க்காரின் கட்டளையாம். அந்த 'ஐவர் வழக்கு' விசாரணையால் எத்தனை விஷயங்கள் வெளியாகியிருக்கின்றன, அத்தான்!

*

''மக்கள் சக்தி மாபெரும் கடல் ... சட்டம் எனும் கப்பலேறி, தப்ப முயல்கிறது, அரசாங்கம்'', என்று நேற்று நடைபெற்ற மாபெருங் கண்டனக் கூட்டத்தில், நம்தோழர் ஒருவர், வீரமுழக்கமிட்டார்—இவ்வளவுபேர் சிறைக்குள்கிடந்தாலும், இங்கு, கழகவேலைகள் தட்டுத்தடங்கலில்லாமல் நடைபெறுகிறது. செயலாளர் இல்லையே, பொருளாளர் போய்விட்டாரே, என்ற கவலையே தென்படவில்லை. பம்பரம்போல் சுற்றிப் பணியாற்றுகிறார்கள் தோழர்கள் — அடிக்கடி, கூட்டங்கள், துண்டு நோட்டீசுகள் மூலம், ஆட்சியாளரின் அட்டகாசத்தை, மக்களிடம் விளக்கி வருகிறார்கள். அதன்படி நடைபெற்ற கூட்டத்தில்தான், மேற்குறிப்பிட்டபடி குறிப்பிட்டார். தடியடியும் துப்பாக்கிக் குண்டும் தாங்கி, காயமுற்றும், காலிழந்தும், கண்ணிழந்தும், நடைப்பிணங்கள் போல், ஆஸ்பத்திரியில் கொண்டு போடப்பட்ட வீரர்களை, அத்தோடு விட்டுவிடவில்லையாம்—அரசாங்கம். வழக்கு போட்டிருக்கிறதாம்! அதுவும், ... விதமான சட்ட ஷரத்துக்களை தேடியெடுத்து!! இதை, அ... தோழர், கூறும்போது, மக்கள் வெள்ளம், 'அக்ரமம்! அக்ரமம்!' என்று முழக்கமிட்டது. அ... முழக்கம் என் காதுகளில், எப்ப...

இனித்தது தெரியுமா? வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன், அத்தான்—தாங்கள், நிலவுக்காலங்களில், தனித்திருக்கும் போது, தமிழ்ச் சொற்களால் பின்னிய கவிதைகளைப் படித்துக்காட்டி, என்னைக் கொஞ்சுவீர்களே—அதைவிட, இனிமையாகயிருந்தது!

அந்தளவுக்கு மக்கள் மன்றத்தில், நம் கொள்கைகள், குடிபுகுவதைக் காணும்போது, யாருக்குத்தான் மகிழ்ச்சி மலராது? மக்கள், நம் கழகத்தைத் தாக்கும் சர்க்காரைக் கண்டு, குமுறுகிறார்கள்! கழகத்தவர், சிறையில் வாடுவதைக் கேட்கும்போது, எரிமலையாகிறார்கள். பக்கத்துவிட்டு, பார்வதிப் பாட்டியைத் தெரியுமே, தங்களுக்கு — காங்கிரஸ் தலைவர் காமாட்சியின் தாயார்—அவர்கள் என்னிடம் வந்து, "எம்மா—அமுதம். உன்புருஷனை, ஜெயில்லே போட்டுட்டாங்களாமே. தங்கமான பிள்ளையாச்சே. நாலுபேருக்கு ஒத்தாசை செய்யற குணமாச்சே, அதை, எப்படி, ஜெயிலிலேபோட மனம் வந்துச்சு? திருடவும் தெரியாது! 'கொலை'ன்னாவே, பயப்படும்! பொய்சாட்சிகூடச் சொல்லத் தெரியாதே!" என்று கேட்டார்கள். நான், சிரித்தபடி சொன்னேன், "பாட்டி! பண்டித ஜவஹர்லால்னு படம்போட்டு வச்சிருக்கிங்களே உங்க விட்டிலே — அவர், நம்மையெல்லாம் 'முட்டாள்'னு சொன்னார். ஒருதரம் சொன்னார் — 'சொல்லாதீங்க அப்படி'ன்னு சொன்னாங்க — மறுபடியும், சொன்னார்; வேணுமென்றே, சொன்னார். அதைக் கண்டிக்கிறதுக்காக, ரயில் சங்கிலியைப் பிடித்து இழுத்து,—அதை இழுத்தா 'அரெஸ்ட்' செஞ்சா, போறதுன்னு முடிவு—கண்டனத்தைக் காட்டப் போனாங்க, எங்க கட்சிக்காரங்க. அதுக்குத்தான், பாட்டி, ஆறு மாதம்! மூன்று மாதம்!!" என்று விளக்கினேன். அதைக் கேட்டதும், அவர்கள், "பண்டிதர் ரொம்பப் பெரிய மனுஷன், என்று தம்பி காமாட்சி சொல்லுதே. ஜனங்களைத் திட்டுறது, தப்புன்னு, தெரிஞ்சதும் —ஏன், ஒத்துக்கப்படாது?" என்று கேட்டார்கள். "உங்க பிள்ளையைக் கேளுங்கள்" என்று சொன்னேன். போய்க் கேட்டார்களாம்! 'அம்மா, இந்தச் சர்க்கார் செய்கிற காரியத்தைப்பற்றி என்னைக் கேட்காதே—சர்க்காரை நடத்துறவங்க எல்லாம் சர்வாதிகாரியாகிட்டாங்க — காங்கிரஸ் கட்சியைப்பற்றி வேணும்னா, கேளு!' என்று, பதில் கூறினாராம்; அவர். அத்தான்! ஒரு வேடிக்கை தெரியுமா? ஜூலை 15-லிருந்து மூன்று நாள், அவர், சாப்பிடவேயில்லையாம்! கல்லக்குடி துப்பாக்கிப் பிரயோகத்தில் செத்தவர்களில் ஒருவர், அவருடைய உறவினராம். கட்சி வேறென்றாலும், இரத்தப் பாசம் விடுமா, அத்தான்! அதைவிட—இன்னொரு சேதி, உங்களுக்கு—அவருடைய மூத்த பிள்ளை கல்லூரியிலே படித்துக்கொண்டிருந்ததே, அது, திருச்சி சிறையிலே கிடக்குதாம்! மூன்று மாதக் கடுங்காவல் தண்டனையாம்!!

அத்தான்! நிறைய எழுதவேண்டும்போலிருக்கிறது — நீங்கள் சொல்லிச் சென்றதுபோல், அன்றன்றுடம் என்ன நடைபெறுகிறது என்பதை எழுதிக்கொண்டே வருகிறேன். தாங்கள் வெளியில் வரும்போது, தங்கள் குழந்தை, என்மடியில் கிடப்பதைக் காணலாம்! தாங்கள் கூறியபடி பெண்ணாகயிருந்தால் 'வெற்றி' என்று பெயர்வைக்கிறேன்—பையனாயிருந்தால், 'எழுச்சி' என்று பெயர் சூட்டுகிறேன். அத்தான்! ஒரு தியாக வீரரின் மனைவி எனும் பெருமையை எனக்குப் பெற்றுத் தந்துவிட்டீர்கள்—எனக்கு வேறென்ன வேண்டும்? அதோ! அதோ! அத்தை, வந்துவிட்டார்கள். நான் இங்கே உட்கார்ந்து கிடப்பதைப்பார்த்தால், உங்களை நினைத்துக்கவலைப்படுவதாக எண்ணி 'அசடே!' என்று அழைப்பார்கள். அந்தச் சொல், அப்பப்பா......என்னால் தாங்க முடியவில்லை. என்னை, ஏன், அத்தான், விட்டுப் போனீர்கள்? இதையெல்லாம் தாங்கிக் கிடக்கவா!

தங்கள்,
அமுதவல்லி

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும்தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒருவாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

பூணூல் விழா!

"ஜர்தி என்பது, படித்தவர்கள், படியாதவர்கள் என்ற இரண்டுதான். வேறில்லை."

செங்கற்பட்டில், ஆச்சாரியார் அவர்கள், இவ்வண்ணம் தெரிவித்தாராம். மகிழ்ச்சி. ஜாதி வேற்றுமைகளை ஒழிக்கும் மனோபாவம், தனக்கு உண்டென்பதைக் காட்டிக் கொண்டிருக்கிறார். ஆனால், இந்த வாரம், ஜாதி மகத்துவத்தைக் குறிக்கும், பூணூல் அணியும்நாள், நாடெங்கும் நடைபெற்றிருக்கிறது. பார்ப்பன மக்களின் இல்லங்கள்தோறும் — அவர்கள் உயர்நீதி மன்றத்து நீதிபதிகளானாலும், உலக அரசியல் ஏடுகளைப் புரட்டி அறிவுரைகள் கூறுவோரானாலும், உயர்ந்த கொள்கையைக் கூறும் தலைவர்களானாலும் —எல்லோரது இல்லங்களிலும், 'ஆவணி அவிட்டம்' கொண்டாடப்பட்டிருக்கிறது. அன்று, அகில உலகச் செய்திகளையும், 'அன்னியன்' மொழியாம் ஆங்கிலத்தில் அள்ளித்தரும், 'இந்து' ஏட்டின், துணையாசிரியர், ஒருவர், தன்னுடைய இளங் குழந்தைகள் இருவரின் தோளில், ஜாதிக்குறியைப், பூட்டியிருக்கிறார்! அதனை விவரித்து, தேசிய ஏடுகள், செய்திகள் தந்துள்ளன. அன்றைய தினம், அதுபோல, இலட்சக் கணக்கான இளம் பிஞ்சுகளின் உள்ளத்தில் ஜாதி ஆணவச்சின்னம், நுழைக்கப்பட்டிருக்கும். பார்ப்பனத் தோழர்கள் எல்லோரும், பழைய பூணூலைக் கழட்டி, புதிய பூணூலை அணிந்து கொண்டிருப்பர்! இந்தப் பூணூல் விழா, எதைக் குறிக்கிறது? — ஆச்சாரியார், அறியாத விஷயமல்ல. கல்கியானாலும், வாஸனானாலும், கஸ்தூரி சீனிவாசனானாலும், சி. பி. ராமசாமியானாலும், வெள்ளையன் மெச்சுமளவுக்கு வியாபாரம் புரியும் அனந்தராமனானாலும், வெளிநாட்டாருடன் போட்டிபோடும் சுந்தரமானாலும், எல்லோரும், ஆவணி அவிட்டத்தன்று, பூணூல் மாற்றி, புதுப் பூணூல் அணியாமலிருந்திருக்கமாட்டார்கள்! அந்த அளவு, ஜாதியவெறி, தலைதூக்கியாடுகிறது, தமிழகத்தில். அந்த ஜாதியவெறியின் மத்தியில் உலவுபவர்—தோழர் ஆச்சாரியார். தன்னுடைய குரு

(13-ம் பக்கம் பார்க்க)

ஏன் இந்த ஆள்தேடு படலம்!

[அடிகள்]

★

"தேவை!

ஓரே ஒரு ஆள் தேவை!

கிராமத்துக்கு ஒரு ஆள் தேவை

அவர் படித்தவராய் இருக்கத் தேவையில்லை!

பெரிய தனக்காரர்போல் நடந்து கொண்டால் போதும்!

பொதுமக்களே! நீங்கள்தான் இந்தக் காரியத்தில் உதவ முன்வர வேண்டும்!

எப்படியாவது ஒரு ஆள் கிடைக்கும்படி செய்யுங்கள்!

அப்படிச் செய்வதை உங்கள் கடமையாகக் கொள்ளுங்கள்!

இன்னொரு தடவை இதைப்பற்றிப்பேசும்போது, நான் நினைத்தபடி ஆள் கிடைத்து விட்டதென்ற நல்ல செய்தியை நாட்டுக்குக் கூற வேண்டும்!

நாட்டவர்களின் நல்லாதரவைப் பெற வேண்டும்!

என்னால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தத்திட்டம் நடைமுறைக்கு வரவேண்டுமானல், பொது மக்களாகிய உங்களுடைய உதவிதான் இப்போது தேவை!

இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்காக நான் கையாண்ட முறைகள் எல்லாம் கவைக்குதவாது போயின!

இப்பொழுதுதான் உணர்ந்தேன் உண்மையை! யாரார் எனக்கு ஆதரவாய் இருப்பார்கள் என்று நினைத்தேனே, அவர்கள் எல்லாரும் இப்போது, என்திட்டத்தை எதிர்ப்பவர்களாகவே காட்சியளிக்கிறார்கள்!

என் தயவை நாடிக் காத்துக் கிடக்கும் சிலரைத் தவிர, மற்றவர்கள் எல்லோருமே என்திட்டத்தை எதிர்க்கிறார்கள்!

எனவேதான், இத்திட்டத்தைப் பற்றிய அந்தரங்கத்தை அறிந்தவர்கள்—அறியக் கூடியவர்கள்—அறிய விரும்புபவர்கள் ஆகிய அனைவரின் நிழலில்கூட நிற்க நான் விரும்பவில்லை.

என்னுடைய லட்சியம்தான் உங்களுக்குத் தெரியுமே!

நாட்டு மக்களைத் தற்குறிகளாக்கி, அவர்களை, முற்போக்குத்துறை எதிலும் தலையெடுக்க விடாதபடி தடுப்பது தானே என்னுடைய லட்சியம்!

அதற்காகத்தானே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்!

எந்த அளவுக்கு இத்திட்டத்தின் அந்தரங்க உண்மையை மறைக்க முடியுமோ, அந்த அளவுக்கு மறைத்தும் கூடப், பலர் அதன் இரகசியத்தை எப்படியோ அறிந்து விட்டனர்!

அதனால் எதிர்ப்பு வலுத்தது! என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்கும் நிலை ஏற்பட்டது! எங்கு சென்று எதைப்பற்றிப்பேசினாலும்; அங்கெல்லாம் இத்திட்டத்தைப் பற்றியல்லவா பேசவேண்டிய நிலைமையை உண்டாக்கி விட்டனர்!

இதைப்பற்றி, இதுவரை, எத்தனை பொதுக் கூட்டங்களில், எத்தனை மாநாடுகளில், எத்தனை எத்தனை காரணங்களை, மேற்கோள்களைக் காட்டிப் பேசினேன்! எத்தனை அறிக்கைகள் விடுத்தேன்! எத்தனை பேரின் சிபார்சை நாடி அலைந்தேன்!

மாணிக்கவேலருக்கு மந்திரி வேலை தந்து, ஆதரிக்கும்படி செய்தேன்!

அரக்கோணம் பக்தவத்சலத்தை சபாநாயகர் பக்கத்திலிருக்கும் 'பாக்யத்தை'க் கொடுத்து ஆதரிக்கும்படி செய்தேன்!

விநாயகத்தின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக் வாக்களித்து ஆதரிக்கும்படி செய்தேன்!

பி. டி. இராசனுக்கு, பின்னல் மந்திரிவேலை காத்துக்கிடக்கிறது என்ற பேராசையை உண்டு பண்ணி ஆதரிக்கும்படி செய்தேன்!

ஆனாலும் எதிர்ப்பு நின்றபாடில்லை! என்னை ஆதரிப்பவர்

களும், என் ஆட்சிக்குத் துணையா
இருப்பவர்களும், என் கட்சியி
இருப்பவர்களில் பலருமே இத்தி
டத்தை வன்மையாகக் கண்டிக்கிற
கள்—எதிர்க்கிறார்கள். என் தி
டத்தை எதிர்த்த சென்னை மே
செங்கல்வராயன் போன்ற ஒருசில
தான், தங்கள் எதிர்ப்புணர்ச்சி
மாற்றி ஆதரிக்கும் ஆர்வத்தை
காட்ட முன் வந்திருக்கிறார்க
என்ற போதிலும், என்னுடை
தயவே தேவையில்லாத என் சகா
கள் பலர் தங்கள் எதிர்ப்புண
சியை மாற்றிக்கொள்ளவே இல்
கல்வி இலாக்காவில் இருக்கும்
பெரிய அதிகாரிகளைக் கூட ; என
சகாக்கள் சிலரிடம் தூதனுப்பி
பார்த்தேன்—பலிக்கவில்லை. க
இலாக்கா ஆலோசகர் தோழர் இ
மச்சந்திரன் அவர்கள் கூட மு
ளள் அமைச்சர் ஓமாந்தூர் இ
சாமி அவர்களை நேரில் பார்த்
தக்க சமாதானம் கூறி இத்தி
டத்தை ஆதரிக்கும்படி கேட்
பார்த்தார் — பலன், பூஜ்யமாக
முடிந்தது.

இந்தத்திட்டத்தின்மீது எனக்கிரு
கும் ஆர்வத்தின், காரணமாக
படி செய்தியைப் பத்திரிக்கைக
கூட வெளியிடும்படி செய்தே
அதாவது, கல்வி இலாகா ஆலோ
ரான தோழர் இராமச்சந்தி
அவர்கள், புதிய ஆரம்பகல்வி தி
டத்தை எதிர்க்கும் ஓமந்தூர் இ
சாமி அவர்களை நேரில் சந்தித்
சமாதானம் கூறி இத்திட்ட
ஆதரிக்கும்படி செய்யப்போவ
ஒரு செய்தி பத்திரிகைகளில்
தது வாசகர்களுக்கு நினைவிரு
ல்லாம். எத்தனை முயற்சிகள்செய்
திட்டத்தின் எதிர்ப்பு வளர்ந்
யன்றிக் குறைந்தபாடில்லை.

எங்கு சென்று எதைப் ப
பேசினாலும், என்னுடைய ஆ
கல்வித் திட்டத்தை எப்படியா
ஆதரியுங்கள்" என்று கெஞ்
கேட்க வேண்டிய நிலையல்லவா
பட்டு விட்டது!

சங்கரரும், இராமானுஜ
யாரைக் கேட்டுக் காரியங்
செய்தார்கள்என்றுகேட்ட நா

இப்போது, மாநாடு கூட்டி, மக்களிடம் மண்டியிட்டுக் கேட்டுக் கொள்ள வேண்டியநிலைமையல்லவா ஏற்பட்டுவிட்டது!

இந்தத் திட்டத்திற்கு வேண்டிய ஆதரவை நகரங்களில் உள்ளவர்களிடம் எளிதாகப் பெற்று விடலாம் என்று எண்ணினேன்—ஏமாந்தேன்! இதோ! நாட்டுப் புரத்துக்குச் செல்கிறேன்! கிராமம் கிராமமாகச் சுற்றப் போகிறேன்! ஒரு கிராமத்துக்கு ஒருவர் வீதம் கிடைத்தால் போதும். என்னுடைய திட்டம் வெற்றியடைந்து விடும்" என்று வீராப்போடு பேசுகிறார்.

"இந்தத் திட்டத்தின் கீழ், குழந்தைகளைக் கிராமங்களில் தொழில் செய்யும் இடங்களுக்கு அழைத்துப்போய்க்காட்டிஉதவ, கிராமத்திற்கு ஒரு ஆளாவது தேவை"

என்று, 22—8—53-ல் செங்கற்பட்டில் நடைபெற்ற ஆரம்பக் கல்வித் திட்ட ஆதரவு மாநாட்டில் பேசிய ஆச்சாரியார் குறிப்பிட்டார். வேலை செய்யும் இடங்களுக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்லக், கிராமத்திற்கு ஒரு ஆள், தேவையாம்! இப்போது என்னென்ன தொழில்கள் கிராமங்களில் நடக்கின்றன? அவை, தனிப்பட்ட முயற்சிகள் எடுத்துக் கற்றுக்கொள்ள வேண்டிய தொழில்களா? கற்றுக் கொடுக்கப்பட வேண்டிய தொழில்களா? அரசாங்கம், தன்னுடையபணத்தை (பொது மக்களின் வரிப்பணத்தை) செலவு செய்து கற்றுக் கொடுக்க வேண்டிய தொழில்கள் ஏதாவது கிராமங்களில் இருக்கின்றனவா? பலகாலமாகவே அரசாங்கத்தால் கற்றுக்கொடுக்கப்பட்டுவந்த தொழில்கள் எல்லாம், இடையில் நிறுத்தப்பட்ட காரணத்தால், கற்றுக்கொள்பவர்களின் தொகை குறைந்து, பல தொழில்கள், செய்வாரின்றிச் சீரழிந்துபோயினவா? அதனால் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதா? எந்தக் கிராமத் தொழில் கற்றுக்கொடுக்க ஆள் அகப்படாததால் அழிந்துவிட்டது? கூறமுடியுமா?

உழவுத் தொழிலா?
க்ஷவரத் தொழிலா?
வெளுக்கும் தொழிலா?
இரும்புத் தொழிலா?
பொன் தொழிலா?
மண் தொழிலா?
மரத்தொழிலா?
நெய்யும் தொழிலா?
கட்டிடத் தொழிலா?
மீன்பிடிக்கும் தொழிலா?
கூடை முறம் பின்னுந்தொழிலா?
மரமேறும் தொழிலா?
குழல் ஊதும் தொழிலா?
பறை அடிக்கும் தொழிலா?
பஞ்சாங்கம் பார்க்கும் தொழிலா?

மேலே குறிப்பிட்ட தொழில்களில் எந்தத் தொழிலுக்கு ஆள் அகப்படவில்லை? எந்தத் தொழில் சர்க்கார் செலவில் கற்றுக்கொடுக்கப்படவேண்டிய தொழில்? மேலே கூறப்பட்ட தொழில்களில் ஏதாவதொன்று எப்போதாவது சர்க்கார் செலவில் கற்றுக்கொடுக்கப்பட்டதா? சர்க்கார் செலவில் கற்றுக்கொடுக்கப்படாவிட்டாலும், சர்க்காரின் முயற்சி அல்லது தூண்டுகோலின் பேரிலாவது அந்தத் தொழில்கள் எந்தக்காலத்திலாவது கற்றுக் கொடுக்கப்பட்டதா? நாம் மேலே குறித்துள்ள தொழில்களில் எந்தத் தொழிலாவது செய்வதற்கு ஆளில்லாத காரணத்தால் நசித்துவிட்டதென்று கூறமுடியுமா? உழவுத் தொழிலிலிருந்து உழைக்காது வாழவழி செய்துகொள்ளப்பட்ட பஞ்சாங்கத் தொழில்வரை எதுவுமே எந்தச் சர்க்காருடைய முயற்சியோ, தூண்டுகோலோ, செலவோ இல்லாமல் அந்தந்தத் தொழில்களுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் தாங்களாகவே கற்றுக்கொண்டவையாகும்—கற்றுக்கொள்பவையாகும்.

இந்த நிலையில், இந்தத் தொழில்களைச் சின்னஞ் சிறுவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் கட்டாயத்துக்குச் சர்க்கார் ஏன் ஆளாகவேண்டும்? சர்க்காரின் பணம் ஏன் செலவழிக்கப்படவேண்டும்? கல்விகற்கும் நேரத்தை மூன்று மணியாகக் குறைக்கும் முட்டாள்தனத்தைஏன் மேற்கொள்ளவேண்டும்? சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? ஆச்சாரியார் கூறிவிட்டார், அதற்காக ஆதரிக்க வேண்டுமென்ற ஆலோசனையற்ற அறியாமைக்கு ஏன் ஆளாகவேண்டும் என்று கேட்கிறோம்.

மண் தொழில் — இதைப்பற்றி ஆச்சாரியார் புளகாங்கிதம் அடைந்து புகழ்ந்து பேசுகிறார்.

"குயவன் பானை செய்வதைப் பார்க்கும்போது என்ன ஆனந்தம் ஏற்படும் தெரியுமா? நான் குழந்தையாக இருந்தபோது இதைப் பார்த்திருக்கிறேன். நான் அநுபவித்த ஆனந்தத்தைச் சொன்னால், நீங்கள் எல்லோரும் குயவன் வேலைக்குப் போய்விடுவீர்கள்."

என்று கூறி ஆனந்தக் கூத்தாடுகிறார் ஆச்சாரியார். தம்முடைய ஆரம்பக் கல்வித் திட்டம் அந்த விநாடியிலேயே வெற்றி அடைந்துவிட்ட மாதிரி வெறியாட்டம் ஆடுகிறார் அந்த விற்பனர்! மண்ணைப் பிசைந்து பானை சட்டி செய்யும் போதுமட்டும், மற்றத் தொழில்கள் செய்யும்போது ஏற்படாத ஆனந்தம், எப்படி—எந்தக் காரணத்தைக்கொண்டு ஏற்படுகிறதென்பது நமக்குத் தெரியவில்லை. தெரிந்ததாகக்கூறும் ஆச்சாரியாரும் அதனை விளக்கிக் கூறவில்லை. "நான் அநுபவித்த ஆனந்தத்தைக் கூறினால் நீங்கள் எல்லோரும் குயவன் வேலைக்குப் போய்விடுவீர்கள்." என்று கூறினாரே தவிர, அவர் அநுபவித்த ஆனந்தம் எப்படிப்பட்டதென்பதை விளக்கவில்லை. குயவன், பானை செய்வதைப் பார்த்துப் பரவசமடைந்து ஆனந்த சாகரத்தில் மூழ்கிய ஆச்சாரியாருக்கு, அந்த அருமையான தொழிலைச் செய்ய வேண்டுமென்ற ஆசை பிறக்காத காரணம் என்ன என்று அங்குக் கூடியிருந்த மக்கள் கேட்டதாகத் தெரியவில்லை. ஆனால், ஆச்சாரியார் அந்த 'அற்புத' சம்பவத்தைக் கூறியபோது அங்கிருந்த அனைவரும் சிரித்தார்கள் என்ற செய்திமட்டும் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. ஏன் சிரித்தார்கள்? சிந்தித்துப் பார்க்கவேண்டாமா?

"அன்பரே, எங்கள் அருமை ஆச்சாரியாரே! எங்களைக் குயவன் வேலைக்குப் போகச்சொல்கிறீரே! எங்களுக்கு அந்த வேலையில் பழக்கமும் இல்லை - அந்த வேலை செய்வதைப் பார்த்துப் பரவசப்பட்டதும் இல்லை. நீங்களோ, அந்த வேலை செய்வதைப் பார்த்ததுமட்டுமல்ல, பரவசமடைந்து ஆனந்த சாகரத்தில் மூழ்கியதாகவும் கூறுகிறீர்களே! அப்படிப்பட்ட ஆனந்

தத்தை அள்ளித்தரும் அந்த அருமையான தொழிலை மேற்கொள்ளாமல் ஏன் இந்த அவதியும் அல்லலும் தரும் அரசாங்க வேலையை மேற்கொண்டீர்கள்.''

என்று கேட்பதையே அந்த சிரிப்புப் பிரதி பலித்திருக்கிறதென்று கருதுகிறோம்! ஒரு வேலையைச் செய்யத்தெரிந்த ஒருவர், அதனைச் செய்யாமல், அந்த வேலை தெரியாதவர்களைப் பார்த்து, "நீங்கள் இந்த வேலையைச் செய்யுங்கள்'' என்று கூறினால் யார்தான் சிரிக்காமல் இருக்கமுடியும்!

எனவே, ஆச்சாரியார், தம்முடைய திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு எத்தனையோ முறைகளைக் கையாண்டு பார்த்துப் பலிக்காதுபோகவேதான், இப்போது, இத் திட்டம்பற்றிப் பேசும்போதெல்லாம், நகைச்சுவையுடன் ஊட்டுவதன் வாயிலாகவாவது மக்களின் ஆதரவைத் திரட்ட முடியாதா என்று பார்க்கிறார். ஆனால், அவருடைய திட்டம் நாட்டுக்கு ஏற்றதல்ல என்பதை நல்லறிவாளர்கள் பலருமே தக்க காரணங்களைக் காட்டி விளக்கியவண்ணம் இருக்கின்றனர்.

"அரசியலையே தொழிலாகக் கொண்ட சிற்சில தலைவர்கள் இன்று கல்வித்திட்டத்தை வகுக்கிறார்கள்.''

என்ற குற்றச் சாட்டை ஒருவர் இன்றைய ஆட்சியாளர்மீது சுமத்துகிறார் என்று நாம் சொன்னவுடனே, நம்முடைய 'அன்புள்ள' எதிர்க்கட்சிக்காரர்கள் இருக்கிறார்களே! அவர்கள் என்ன சொல்வார்கள் தெரியுமா? இப்படிக் கூறுபவர்கள் காங்கிரஸ் சர்க்காரின் எதிரிகளாகத்தான் இருக்கமுடியும் என்று எடுத்த எடுப்பிலேயே பதில்கூறிவிடுவார்கள். ஆனால், உண்மை எது என்று உணர்ந்தவுடன் அல்லது உணர்த்தப்பட்டவுடன் உளறுவாய் ஊமையாகிவிடும். நாம் மேலே எடுத்துக்காட்டிய குற்றச்சாட்டு நம்மால் சுமத்தப்பட்டதல்ல. டாக்டர் ஆர். நாகராஜ சர்மா, எம். ஏ., எல். டி., பி. எச். டி., என்ற பேராசிரியரால் எடுத்துக் காட்டப்பட்ட குற்றச் சாட்டினையே இங்கு நாம் மேலே தந்துள்ளோம். ஐந்து உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களின் சங்கக் கூட்டம் ஒன்றில் பேசும் போதுதான் டாக்டர். சர்மா அவர்கள் இந்தக் குற்றச்சாட்டை அரசாங்கத்தின்மீது சுமத்திப் பேசியுள்ளார். அரசியல் தலைவர்கள்கல்வி சம்பந்தமான திட்டங்களை வகுக்கக்கூடாது—வகுக்க அனுமதிக்கக் கூடாது என்று ஆணித்திறமாகவே பேசியுள்ளார். அவர் மேலும் பேசுகையில்,

"கல்வி என்பது ஒரு ஒளி. இருளைப் போக்குவது ஒளியின் சுபாவம். ஆனால் தற்காலக் கல்வி நிலையோ இருளை அதிகப்படும்படியான ஓர் ஆச்சரிய ஒளியாக விளங்குகிறது.''

என்பதாகக் கூறியுள்ளார். அறியாமை என்னும் இருளை நீக்கி அறிவென்னும் ஒளியை உண்டாக்குவது கல்வி என்றபோதிலும், இன்றைய கல்வி முறை, சிறிதளவு இருக்கின்ற அறிவையும் அழிப்பதாக அமைந்துள்ளதென்று கூறுகிறார். இதற்குக் காரணம், அரசியலார் கல்வித் துறையில் தலையிடுவதுதான் என்பதை ஒளிவு மறைவின்றி எடுத்துக் காட்டுகிறார்.

"உங்கள் கூட்டங்களுக்கு அதிகார வர்க்கத்தினரையே அழைக்கலாகாது''

என்று அழுத்தந் திருத்தமாக ஆசிரியர்களுக்கு எச்சரிக்கை செய்கிறார். இவ்விதம் எச்சரிக்கை செய்பவர் சோமசுந்தரபாரதியார் அல்ல. அவருடைய எச்சரிக்கைக்குத்தான் இன்றைய ஆளவந்தார்கள் செவிசாய்க்கமாட்டார்களே! எனவேதான், வைரத்தை வைரத்தால் அறுப்பதுபோல், ஆச்சாரியாரின் திட்டத்தைச் சர்மாவே சாடுகிறார் என்று எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது. சோமசுந்தரபாரதியார் போன்ற கல்வி நிபுணர்கள்கூட இவ்வளவு கடுமையாக ஆச்சாரியாரின் திட்டத்தைக் கண்டிக்க முன்வரமாட்டார்கள். ஆனால், ஆச்சாரியாரின் இனத்தவரான சர்மாபோன்ற கல்வி நிபுணர்களோ, அவர்களுக்கென்றிருக்கும் தனி உரிமையின் காரணமாகவோ என்னவோ, ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தை அக்குவேறு, ஆணிவேறாகப் பிரித்துப் பிரித்து அதிலுள்ள குறைகள் இவை இவை என்று விளக்கிக் காட்டுவதைக் காணக் களிப்படைகிறோம்.

"கல்வித் திட்டங்களை ஆசிரியர்களே வகுத்துச் சட்டசபைக்கும் அரசாங்கத்திற்கும் அனுப்ப வேண்டும். அவைகள் அப்படியே சட்டமாகவேண்டும். லார்டுபிஷர் காலத்தில் சீமையில் ஆசிரியர்களுக்கு இவ்விதமான உரிமை இருந்தது.''

என்று டாக்டர் சர்மா அவர்கள் குறிப்பிட்டுப் பேசியுள்ளார். கல்வித் துறையில் அனுபவம் பெற்று, அதறிவென்று இருக்கும் ஆசிரியர்கள்தான், நாட்டுக்கு ஏற்ற கல்வி எது என்பதை அறியவும், அதற்கேற்ப நல்லதொரு திட்டத்தை வகுக்கவும் தகுதியுடையவர்கள் என்பதுதான் நமது கருத்தும் முடிவுமாகும். ஆனால், இன்றைய கல்வித் திட்டத்தை வகுக்கும் தகுதியும் உரிமையும் அரசியல் தலைவர்களிடமே இருக்கிறது! தவறு! தவறு!! 'அரசியல் தலைவர்களிடம்' என்று கூறியதற்கு மன்னிக்கவும். அரசியல் தலைவனிடம் தான் அந்த உரிமை இருக்கிறது. அதாவது, தனிப்பட்ட ஒருவர், தான், அரசியல் தலைவனாக இருக்கின்ற ஒரே காரணத்தை அடிப்படையாக வைத்து, தான் எதையும் செய்துவிடலாம்—செய்துவிட முடியும் என்ற தருக்கோடு காரியங்களைச் செய்துகொண்டுபோகும் ஒரு மிகமிக மட்டரகமான அரசியல் முறை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த மோசமான நிலையைத்தான் டாக்டர் சர்மா அவர்கள் கும்பகோணத்திலுள்ள ஆசிரியர்களுக்கு விளக்கிக்கூறி, ஆசிரியர்களின் உரிமையை ஒரு அரசியல் தலைவன் பறிக்கக் கூடாது—பறிக்க இடமளிக்கக் கூடாது என்று அறிவுறுத்தியிருக்கிறார். கல்வி சம்பந்தமான எந்தத் திட்டமும் ஆசிரியர்களால் வகுக்கப்படவேண்டுமேயொழிய, அரசியல் தலைவன் அதில் தலையிடக்கூடாதென்பதை மிகமிகத் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கிறார். அதோடு, இப்போது ஆச்சாரியாரால் கொண்டுவரப்பட்டிருக்கும் ஆரம்பக்கல்வித் திட்டத்தைப்பற்றி அவர் குறிப்பிட்டுப் பேசுகையில்,

"இந்தத் திட்டம் கல்வி கற்பவர்களுக்கு நன்மை பயப்பதாக இல்லை. மாணவர்களுக்கு உபாத்தியாயர்களிடம் இருக்க வேண்

டிய மரியாதை இத்திட்டத்தால்
குறைந்துவிடுகிறது"

என்பன போன்ற குறைகளை எடுத்துக் காட்டிக் கண்டித்திருக்கிறார். கல்வி கற்பவர்களுக்கு நன்மை தராத கல்வியைக் கட்டாயப் படுத்திச் சட்ட பூர்வமாக நடைமுறைக்குக் கொண்டு வருவது போன்ற அடாத செயல் வேறொன்றில்லை என்ற காரணத்தைக் காட்டியே நாமும் அத்திட்டத்தை எதிர்க்கிறோம். புதிய கல்வித் திட்டம் நன்மைக்குப் பதில் தீமையையே உண்டாக்குவதாக இருக்கிறது—அறிவை அழிக்கிறது—வர்ணாசிரம தர்மத்தை நிலைநாட்டுகிறது என்ற குற்றச்சாட்டுகளைப் புதிய கல்வித் திட்டத்தின் மீது நிரூபித்துக் காட்டி அதனைக் கைவிடும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டோம். ஆனால், டாக்டர் சர்மா போன்றவர்கள் போல் பேச்சோடு மட்டும் நின்று விடாமல், அத்திட்டத்தைக் கைவிடும்படி செய்வதற்குச் சட்ட வரம்புக்குட்பட்டுச் செய்யக் கூடிய சில அரசியல் நடவடிக்கைகளைக் கையாண்டோம். ஆனால், அது சட்டத்தை மீறிய செயலாகச் சர்க்கார் கருதுகிறது—கருதியபடி தண்டித்துச் சிறைக்குள் அனுப்பிய வண்ணம் இருக்கிறது.

சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பது என்றால் எப்படி? சட்டத்தை மீறி நடப்பது என்றால் எப்படி என்பதையே புரிந்து கொள்ள முடியாதவர்களே ஆட்சியை நடத்துபவர்களாக இருப்பதால், நம்முடைய நியாயமான கோரிக்கைகள் எல்லாம் டாக்டர் சர்மா போன்ற அறிவாளிகளுக்குச் சரி என்று படுகிற இந்த அளவோடுதான் நாமும் திருப்திப்பட்டுக் கொண்டு இருந்து விடலாம் என்று எண்ணினாலோ, இன்று நடக்கும் ஜனநாயகக் கொலைக்கு நாமும் உடந்தையாக இருக்கிறோம் என்ற பெரிய குற்றச்சாட்டு நம்மீதும் வந்து விழுந்து விடும் அச்சத்தாலேயே, ஜனநாயகத்தைக் காப்பாற்றும் அறப்போர் முறைகளைக் கையாள வேண்டியிருக்கிறது;

அதிலும் சுதந்திரம் பெற்ற ஒரு நாட்டில் ஜனநாயகம் கேலிக்கூத்தாக்கப்படுகிறதென்றால், அந்தக் கேலிக்கூத்தை அந்த நாட்டிலுள்ள அனைவருமே சேர்ந்துதான் செய்கிறார்கள் என்று எவரும் தப்புக் கணக்குப் போட்டு விடக்கூடாது—நடப்பது பெயரளவில் சுதந்திர ஆட்சி என்ற போதிலும், நடைமுறையில் செய்யப்படும் காரியங்கள் எல்லாம் சுதந்திரத்தைச் சுக்கு நூறாகக் கிழித்தெறிபவையே என்பதை மற்றவர்கள் அறிய வேண்டுமென்பதற்காகவே அறப்போர் முறைகளைக் கையாண்டு சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் காப்பாற்ற வேண்டியிருக்கிறது.

ஆனால் இப்போது நடப்பது சுதந்திர ஆட்சியல்ல என்பதை டாக்டர் சர்மா போன்றவர்களும் உணரக் கூடிய சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும் ஆச்சாரியார் உண்டாக்கி விட்டார் என்பது டாக்டர் சர்மா அவர்களின் பேச்சிலிருந்து நன்கு தெரிகிறது.

கல்வியைப் பற்றியே பேசும்படி அழைக்கப்பட்ட டாக்டர் சர்மா அவர்கள் சுதந்திரத்தைப் பற்றியும் பேச வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானார் என்றால், இன்றைய சுதந்திரம் எந்த அளவுக்கு மோசமாக ஆக்கப்பட்டிருக்கிறதென்பது புலனாகும்.

"இன்றிருக்கும் சுதந்திரம் —
சுதந்திரமல்ல. கட்டுப்படுத்தும்
எதுவும் சுதந்திரமாகாது"

என்று சிறிது கோபமாகவே பேசியிருக்கிறார் என்பது, அவர் சுதந்திரத்தைப்பற்றிப் பேசும்போது கையாண்ட சொற்களிலிருந்து நன்கு தெரிகிறது. மக்களின் கோரிக்கைகளை — உரிமைகளைக் கட்டுப்படுத்துவதும், கட்டுப்படுத்தப் படுபவைகளைச் சட்டப்படி மீறினால், மீறுபவர்களைத் தண்டித்து அடக்குவதும் சுதந்திர ஆட்சியின் இலட்சணமா என்று அறிவுலகில் உலவும் சர்மா போன்றவர்கள் கேட்பது ஆச்சரியமல்ல—சாதாரண அரசியலறிவே பெறாத ஆசாமிகூட இப்படிப்பட்ட சுதந்திரத்தைப் பார்த்துக் கைகொட்டி நகைத்தால் அதை ஒரு ஆச்சரியம் என்று யாருமே கூறமாட்டார்கள்.

*

ஆரம்பக் கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான—கொண்டுவந்து விட்டதற்காக ஆச்சாரியாரால் கூறப்படும் காரணங்கள் பலவற்றுள் மிக முக்கியமானது என்னவென்றால், கல்வித் துறையில் உள்ளவர்களின் ஆதரவு தமக்கு இருப்பதாகக் கூறுவதுதான். இதனை எங்கு சென்றாலும் ஆச்சாரியார் கூறத் தவறுவதில்லை. செங்கற்பட்டு மாநாட்டில் பேசும்போதுகூட,

"கல்வியில் அனுபவமுள்ளவர்களைக் கேட்டேன், கல்வி இலாகா டைரெக்டரைக் கேட்டேன். உறுதிமொழி தந்தார்கள். அதனால்தான் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது"

என்று பேசியுள்ளார். 'கல்வியில் அனுபவமுள்ளவர்கள் என்று ஆச்சாரியார் யாரைக் குறிப்பிடுகிறார் என்பதுதான் தெரியவில்லை. கல்வி இலாகா டைரெக்டர் உறுதிமொழி தந்தார் என்று ஆச்சாரியார் கூறுவது எள்ளி நகையாடக்கூடிய ஒன்றாகும். ஆச்சாரியாரின்கீழ் அலுவல் பார்ப்பவர்களில் பெரும்பாலோர் ஆச்சாரியாரின் வேண்டுகோளுக்காகவும், அவருடைய தயவுக்காகவும் கட்டுப்பட்டு இருப்பவர்கள். அப்படிப்பட்டவர்கள் ஆச்சாரியார் எதைச் சொன்னாலும் "ஆமாம்" போடுவதைத் தவிர, வேறொன்றும் செய்யமாட்டார்கள். எனவே, ஒரு ஆட்சித் தலைவன், ஒரு காரியத்தை நடைமுறைக்குக்கொண்டு வரும் போது, "இது என்னுடைய சிப்பந்தியால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று, ஆகையால் இதனை நீங்கள் எல்லோரும் ஆதரியுங்கள்" என்று கூறுவானானால், அப்படிப்பட்ட ஆட்சித் தலைவனைப்பற்றி அறிவுலகம் என்ன எண்ணும் என்பதனைக்கூட எண்ணிப் பார்க்க நேரமில்லாத நிலையைப் பெற்ற ஆச்சாரியார், கல்வி இலாகா டைரெக்டரின் உறுதிமொழியோடுதான் இத்திட்டத்தை அமுலாக்கி இருக்கிறேன் என்று வெட்கமின்றிக் கூறுகிறார்.

ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வித் திட்டத்தை எதிர்க்கும் காமராஜரும் பிறரும் ஒரு பக்கம் இருக்கட்டும்—அவர்களுக்குக் கல்வியைப்பற்றி ஒன்றுமே தெரியாதென்றே வாதத்துக்காகவாவது வைத்துக் கொள்வோம். இதோ, கல்வித் துறையில் நல்ல அனுபவம் பெற்ற டாக்டர் ஆர். நாகராஜ சர்மா, எம்.ஏ; எல்.டி; பி. எச். டி.; எதிர்க்கிறாரே! அவர் யார்? தி. க; தி. மு. க. ஆதரவாளரா? அனுதாபியா? கல்வித்துறை

(12-ம் பக்கம் பார்க்க)

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 30—8—53 [ஞாயிறு

ஏன் இந்தக் கொடுமை?

★

15—7—53-ல் தி. மு. க. திட்டப்படி தமிழ்நாடெங்கும் நடைபெற்ற ரயில் நிறுத்தக் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தோழர்களில் பலரின் வழக்குகள் இன்னும் நடைபெற்றவண்ணம் உள்ளன. பலர் தண்டிக்கப்பட்டுச் சிறை சென்றுள்ளனர். சிலர் சிறை சென்று திரும்பிவந்தும் விட்டனர்.

ஆனால், ஒரு சிலர் எந்தவிதமான விசாரணையுமின்றிக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தியைக் கேள்விப்படும்போது, இந்த ஜனநாயக சர்க்காரின் விசித்திரமான—விபரீதமான போக்கை எப்படி வர்ணிப்பதென்றே தெரியவில்லை.

தூத்துக்குடியில், ரயில் நிறுத்தக் கிளர்ச்சியில் ஈடுபட்ட நூற்றுக்கு மேற்பட்ட தோழர்களை எந்தவிதமான விசாரணையுமின்றிக் காவலில் வைத்திருப்பதாகவும், அவர்களை ஜாமீனில் விடக்கூட மறுப்பதாகவும் நமக்குச் செய்தி கிடைத்துள்ளது.

தூத்துக்குடித் தோழர்கள் மீது மட்டும் ஏன் இந்த விசித்திரமான முறையைச் சர்க்கார் கையாள வேண்டுமென்பதுதான் தெரியவில்லை. மற்ற ஊர்களில் கையாளப்படாத முறைகள் எதனையும் தூத்துக்குடித் தோழர்கள் கையாண்டார்கள் என்று கூறுவதற்கும் இல்லை—கூறப்படவுமில்லை.

தூத்துக்குடிப் புதுக்கிராமத்தில் நடைபெற்ற அசம்பாவித சம்பவத்துக்கும் தி. மு. க. வுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று ஆதாரபூர்வமாகப் பல தடவை விளக்கப்பட்டு விட்டது. அதுவுமன்றித், தூத்துக்குடியில் நடைபெற்ற அந்தச் சம்பவம், ரயில் நிறுத்தக் கிளர்ச்சியை ஒரு நல்ல தருணமாகப் பயன்படுத்திக்கொண்ட சில கொள்ளைக் கூட்டத்தாரால் நடத்தப்பட்டிருக்கலாமென்றும், தி. மு. க. வுக்கும் அந்தச் சம்பவத்துக்கும் தொடர்பு உண்டாக்கிக் கூறமுடியாதென்றும், தூத்துக்குடித் துப்பாக்கிப் பிரயோக சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையின் போது சாட்சியளித்த போலீஸ் அதிகாரியே கூறியிருக்கிறார். அப்படியிருந்தும் தூத்துக்குடித் தோழர்களை மட்டும் ஏன் இப்படிக் கொடுமைப்படுத்த வேண்டும்?

தூத்துக்குடியைப் பொறுத்தவரையில் எடுக்கப்பட்டிருக்கும் இந்தத் தனி நடவடிக்கைக்குக் காரணம் யார்? சென்னை சர்க்காரின் அனுமதியின்பேரில் அந்தத்தோழர்கள் விசாரணையின்றி அடைக்கப்பட்டுள்ளனரா? அல்லது தூத்துக்குடியிலுள்ள அதிகாரிகளே இந்தக் கொடுமையைச் செய்கின்றனரா? என்பதற்குச் சர்க்கார் தக்க பதில் தரவேண்டுமென்றும், காரணம் எதுவும் இன்றிக் கழகத் தோழர்களைக் காவலில் வைத்திருக்கும் ஜனநாயகத்துக்கு அப்பாற்பட்ட சர்வாதிகாரக் கொடுமையைக் கைவிட்டு, அந்தத் தோழர்களை விசாரணைசெய்து, குற்றஞ் செய்திருப்பின், மற்ற ஊர்த்தோழர்களுக்கு அளிக்கப்பட்டதுபோல் இவர்களுக்கும் தண்டனை கொடுக்க வேண்டுமே தவிர, காரணம்கூறாமல் காவலில் வைத்திருக்கும் கொடுமையைச் செய்யவேண்டாமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.

காஞ்சியில் சிறப்புக் கூட்டம்

—

சி. வி. இராசகோபல் அவர்களுக்கு வரவேற்பு

—

புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை எதிர்த்து, அறப்போரில் ஈடுபட்டு, சிறை சென்று திரும்பிய, காஞ்சி நகரசபை உறுப்பினர் சி. வி. இராசகோபால் அவர்களுக்கு, காஞ்சி அறிவு வளர்ச்சிக் கழகத்தாரால், 26—8—53 புதனன்று வரவேற்பளிக்கப்பட்டது. கூட்டத்திற்கு ஈழத்தடிகள் அவர்கள் தலைமை தாங்கினார்.

பல கழகங்களின் சார்பாகவும் தோழர்களின் சார்பாகவும், சிறை சென்று மீண்ட தோழருக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தலைவரின் முன்னுரைக்குப் பின், தோழர் இராசகோபால் அவர்கள் தன் சிறை அனுபவத்தை எடுத்துக் கூறினார்.

அடுத்து, அறப்போரில் ஈடுபட்டு சிறை சென்று மீண்ட சென்னைத் தோழர் முனுசாமி அவர்கள் தன் சிறை அனுபவத்தையும், சிறை சுகாதாரமற்றுக் கிடக்கும் ஒரு சாக்கடையாகக் கிடக்கிறது என்பதையும், சிறையில் தோழர் இராசகோபால் அவர்கள் செய்த பணியினையும் எடுத்துக் கூறினார்.

பின்னர், அறப்போரில் பங்கு கொண்டு சிறைத் தண்டனை பெற்றுத் திரும்பிய கருவூர் கிட்டு அவர்கள், ஆச்சாரியாரின் ஆகாத திட்டத்தைக் கண்டித்துப் பேசினார்.

கடைசியாக, அண்ணாதுரை அவர்கள், சிட்டுக் குருவிபோல் பறந்து சுயேச்சையாய்த் திரிந்து வரும் நண்பர் இராசகோபால் அவர்கள், சிறையில் வாடி வதங்கியது, ஒரு இலட்சியத்துக்காக என்பதை எடுத்துக் காட்டி, இலட்சியத்துக்காகப் பணிபுரிந்த நண்பரைப் பாராட்டி, தி. மு. க. பார்ப்பனர்களுக்குக் கடைசி நண்பர்கள் என்றும், அவர்கள் பார்ப்பன விரோதிகள் அல்ல என்றும் நன்கு விளக்கிக் கூறி, சிறையில் வாடும் எல்லாத் தோழர்களையும் பாராட்டிப் பேசினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இனிது முடிவுற்றது.

★

சோதிடம் என்பது சுத்தப் பொய்

மூட நம்பிக்கையை சாதகமாக்கிக்கொண்டு ஏமாற்றும் வித்தை

போலி விஞ்ஞானம்

[சோதிடம் என்பது ஓர் ஏமாற்று வித்தை என்று நாம் கூறினால், சீற்றம் கொள்ளும் தோழர்கள் பலர். இவர்கள் எல்லாவற்றையும் குறை கூறுகிறவர்கள் என்று தூற்றுவோர், மிகப்பலர். அப்படிப் பட்ட தோழர்களுக்கு இலாரேண்ட் என்பவர், 'தி இந்தியன் ரேஷனலிஸ்ட்' என்ற ஆங்கில இதழில் வெளியிட்டதின் கருத்து இங்கு தரப்படுகிறது. [ஆ-ர்]

*

ஜோதிட சாஸ்திரம் விஞ்ஞான பூர்வமானதென்று இன்னும் பலர் மயக்கமடைந்திருக்கின்றனர். இந்தியாவிலுள்ள பல்கலைக் கழகங்கள் இந்த போலி ஞானத்தை இளைஞர்களுக்குக் கற்றுக்கொடுத்து அவர்களை அறிவிழக்கச் செய்கின்றன.

திருவாங்கூர்-கொச்சியைச் சேர்ந்த ஒரு அங்கத்தினர் சமீபத்தில் இந்திய பார்லிமெண்டில் இந்த சாஸ்திரத்தை கற்றுக்கொடுக்க அரசாங்க உதவி அளிக்கப்படவேண்டுமென்று ஒரு பிரேரபணை கொண்டுவந்திருக்கிறார். ஆதலால் ஜோதிட சாஸ்திரத்தின் அடிப்படை அபத்தத்தை வெளிப்படுத்தி பொதுமக்களுக்கு உண்மை நிலையை தெளிவு படுத்த வேண்டியது இப்போது பகுத்தறிவாதிகளின் முக்கியமான கடமையாகியிருக்கிறது. இந்தக் கட்டுரையில் ஜோதிட சாஸ்திரத்தின் ஒரு அம்சத்தை இங்கு எடுத்துக்காட்டி, ஜோதிடர்களின் தவறான கணக்குகளையும் புரட்டுகளையும் வெளிப்படுத்த நான் விரும்புகிறேன்.

ஆரம்பகால மனிதன் பூமி அசையாமல் ஸ்திரமாக நிற்பதென்றும், சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும் பூமியைச் சுற்றிச் சுழன்று வருகின்றனவென்றும் கருதினான். காபர்நிகஸ் இந்த மயக்கத்தை தெளிவுபடுத்தியதால், இன்று ஒவ்வொரு மாணவனும் 'பூமிதான் சூரியனைச்சுற்றி வருகிறது' என்ற உண்மையைத் தெரிந்துகொண்டிருக்கொண்டிருக்கிறான். ஆனால்ஜோதிட சாஸ்திரம் காபர்நிகஸ் காலத்திற்கு முந்திய சித்தாந்தத்தைஅடிப்படையாகக்கொண்டு, பூமி அசையாமல் ஸ்திரமாக இருக்கிறதென்றும், இதர கோளங்கள் அதைச்சுற்றிவருகின்றனவென்றும் கற்பனை செய்கிறது. 500 ஆண்டுகளுக்கு முன்னர் நிரூபிக்கப்பட்ட காபர்நிகசின் வான சாஸ்திர உண்மைக்குப் புறம்பாக, அவருக்கு முற்பட்ட காலத்திய அடிப்படையைக் கொண்டு, ஜோதிடம் தொழில் செய்யப்பட்டு வருகிறதென்பதை, ஜோதிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்போர் மனதில் கொள்வார்களாக!

பூர்வ எண்ணம்

வானத்திலுள்ள கோளங்கள் உயிருடன் வாழும் ஜீவ வர்க்கங்களென்றும், இவற்றின் அதிகாரத்தினால்தான் பூமியிலுள்ள மனிதன் நன்மை — தின்மைகளும், கஷ்ட நஷ்டங்களும் ஏற்படுகின்றனவென்றும், பூமியிலுள்ள ஒவ்வொருவரது வாழ்க்கையையும் இந்தக் கோளங்களே நிர்வகித்து வருகின்றனவென்றும், பூர்வகால மனிதன் கருதிவந்த அடிப்படையையே, ஜோதிட சாஸ்திரம் கொண்டிருக்கிறது. பூர்வகாலத்தில் மக்கள் அநாகரிகர்களாக இருந்ததால் அவர்களது அறிவுக்கெட்டாத விஷயங்களைத் தெய்வமெனக்கருதிபூஜித்து வந்தனர். காற்று, மழை, வெய்யில், நிலவு, நட்சத்திரம் கிரகம்போன்ற சக்திகளுக்கு இத்தகைய முறையில் தான் இவர்கள் பூஜை செய்து வந்தார்கள். ஆனால், இன்று நமக்கு நட்சத்திரங்களும் கிரகங்களும் உயிருடன் வாழும் ஜீவராசிகளல்லவென்றும், அவை உஷ்ணமுள்ள கோளங்களென்றும் நமது பூமியும் சூரியனைச் சுற்றிவரும் ஒரு சிறிய கோளமென்றும், சூரியன்கூட ஒரு சிறிய நட்சத்திரமென்றும், அதிக சக்திவாய்ந்த தூரதரிசினியால்கூட பிரபஞ்சத்திலுள்ள சகல வஸ்துக்களையும் நாம் தெரிந்துகொண்டு விட முடியாதென்றும், நாம் காணும் பிரபஞ்சமும், மகத்தான ஒரு பெரிய பிரபஞ்சத்தின் ஒரு கூறுதானென்றும் தெரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறோம் இன்று நாம் இயற்கையைப் பற்றி தெரிந்துகொண்டிருக்கும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது வானத்திலுள்ள வஸ்துக்களுக்கு, மனமும் குணமும் உண்டென்றும், அவற்றின் கவனம் நம்மீது இருந்து வருகிறதென்றும் கூறுவது அபத்தமான கூற்றென்றே கொள்ளவேண்டியிருக்கிறது.

ஜோதிட சாஸ்திரம் ஒருவர் பிறக்கும்போதுள்ள நட்சத்திரத்தின் நிலைக்கு ஏற்ப, அவரது விதி நிர்ணயிக்கப்படுகிறதென்றும், இந்த நட்சத்திரம் அசைவதற்கேற்ப அவரது வாழ்க்கை நிர்ணயிக்கப்படுகிறதென்றும் கூறுகிறது. மனிதர்களது வாழ்க்கையை பன்னிரண்டு ராசிகளும் ஒன்பது கிரகங்களும், 27 நட்சத்திரங்களும் கட்டியாள்கின்றனவென்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது.

ராசிகள்

ராசிச் சக்கரங்கள் உத்தேசமாக மதிப்பிடப்பட்ட ஒரு கணித முறையாகும். வானத்தில் தெரியும் நிழலைக் கொண்டு இந்த ராசிகளுக்கு பூர்வகால மக்கள் பெயரிட்டனர். மேஷம் (செம்மறி ஆடு), ரிஷபம் (காளை), மிதுனம் (இரட்டையர்,

கடகம் (நண்டு), சிம்மம் (சிங்கம்), கன்னி, துலாம் (தராசு) விருச்சிகம் (தேள்), தனுர் (வில்லாளி), மகரம் (வெள்ளாடு), கும்பம் (தண்ணீர் எடுப்போன்), மீனம் (மீன்கள்) என்று இவற்றிற்குப் பெயர்கள் கொடுக்கப்பட்டன.

வானத்தில் தெரிந்த நிழலுருவங்களைக் கொண்டே இப்பெயர்கள் அக்கால மக்களால் கொடுக்கப்பட்டன. மார்ச் மாதம் 22-ம் தேதி சூரியன் மேஷராசிக்கு வந்து மாதா மாதம் ஒவ்வோர் ராசிக்கு மாறுகின்றது என்றே ஜோதிட சாஸ்திரம் கூறுகின்றது.

சூரியன் சுழலுவதில்லையென்றும், பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறதென்றும் வான சாஸ்திரம் தெளிவுபடுத்தியிருக்கிறது. எனவே உண்மையில் சூரியன் ராசிகளுக்கு மாறுவதேயில்லை. இந்த ராசிகளை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஜோதிட சாஸ்திரிகள் தங்கள் மனதுக்கெட்டியவாறு நிர்ணயித்தனர். வான மண்டலத்திலுள்ள நட்சத்திரங்கள் தொடர்ச்சியாக மாறிமாறி வருகின்றன. சில நமக்கருகே வருகின்றன. சில நம்மைவிட்டு நெடுந்தூரத்திற்கப்பால் சென்றுவிட்டன. இந்த இருபது நூற்றாண்டுகளில் இராசி மண்டலமும் தனது பாதையை மாற்றிக்கொண்டுவிட்டது. நமது துருவ நட்சத்திரத்திற்கும் எகிப்தியர்களின் துருவ நட்சத்திரத்திற்கும் மாறுபாடு இருக்கிறதென்பது வான சாஸ்திர மாணவர்களுக்கு நன்கு தெரியும். பூமியின் நடு அச்சும் படிப்படியாகமாறி வருகிறதென்றும்நட்சத்திரங்களும் இதனால் நிலைமாறி இருக்கின்றனவென்றும் நன்கு தெரிகிறது. 'பகலிரவு சமமுடைய நாள். [விசு]முன் நிகழ்தல் அடைந்து வருவது'என்று இதை குறிப்பிடப்படுகின்றது. இதிலிருந்து இராசி மண்டல சமிக்ஞைகள் பிழைப்பட்டிருக்கின்றனவென்றும், ஜோதிட சாஸ்திரத்தின் அடிப்படையும் தவறாகி இருக்கின்றனவென்றும் நன்கு தெரிகிறது. இராசி மண்டலம் கண்டுபிடிக்கப்பட்ட 20 நூற்றாண்டுகளாக நட்சத்திரங்கள் 30 டிகிரிகள் நிலைமாறி இருக்கின்றன. இந்த ராசிகள் பூராவும் மாறி அடுத்த ராசிகளுடைய 'வீடுகளுக்குச்' சென்றுவிட்டன. எனவே ஆரம்ப சித்தாந்தங்களும் அவற்றின் அடிப்படையில் கணிக்கப்பட்டவைகளும் இப்போது விவேகமற்றதாய் இருக்கின்றனவென்று தெரிகிறது. வானசாஸ்திர அறிவைப் பெற்றிருக்கும் தற்கால ஜோதிட சாஸ்திரிகளில் ஒரு சிலர் இப்போது சற்று கணக்கை மாற்றி நட்சத்திரங்களின் நிலை மாற்றத்தை சரி செய்துகொள்ள முயல்கின்றனர். ஆனால் இத்தகைய கணக்குகளை மிகவும் திறமைப் படைத்த வானசாஸ்திரிகள்தான் சீர்செய்துகொள்ளமுடியும். சாதாரண ஜோதிட சாஸ்திரி இத்தகையநவீன முறைகளைத் தெரிந்துகொண்டிருப்பதாகக் கூறினால், அவர் நம்மை ஏமாற்றுகிறாரென்றே நாம் கருத வேண்டியிருக்கிறது.

கிரகங்கள்

நமது ஜோதிட சாஸ்திரிகள் கிரக நிலைகளையும் அடிப்படையாகக் கொண்டு ஜோதிடம் பார்க்கின்றனர். கிரகம் என்றால் ஒரு இடத்தில் நிலைக்காமல் 'சுற்றித்திரிவது' என்றே பொருள்படுகிறது. மிகவும் துரிதமாக இடம் மாறும் வான மண்டல வஸ்துக்களையே 'கிரகமென்று கூறப்படுகிறது. ஜோதிட சாஸ்திரிக்கு, சூரியன், சந்திரன், புதன், செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது என்ற ஒன்பது கிரகங்கள் இருந்து வருகின்றன. சூரியன் சுற்றி வரும் வஸ்துவென்றும் பூமி அசையாமல் நிலைத்து நிற்கக் கூடியதென்றும் ஜோதிடர் கருதுகிறார். ராகும் கேதும் கிரகங்களல்லவென்று நீண்ட காலத்திற்கு முன்னரே வான சாஸ்திரிகளால் நிரூபிக்கப்பட்டுவிட்டது. சூரிய சந்திர கிரகணங்களைப்பற்றி அக்காலத்தில் விளக்கியவர்கள் ராகு, கேது என்ற இரு பெரிய பாம்புகள் இவற்றை விழுங்குவதால்தான் இவை ஏற்படுகின்றனவென்று கூறினார்கள். இந்தப் 'பூதங்களைப் பற்றி' பல கட்டுக்கதைகளும் புனையப்பட்டன. இன்று சகல மாணவர்களுக்கும் கிரகணங்கள் எப்படி ஏற்படுகின்றன வென்பதைப்பற்றி நன்கு தெரியும். ராகு கேது கதைகளை உண்மையென நம்பிக் கொண்டிருக்கும் ஜோதிடர்கள் வருணன்(நெப்சூன் —Neptune) விமந்தன் (யுரேனஸ்—Uranus 1751-ல் கண்டுபிடிக்கப்பட்டது), 'காலன்', (புளுட்டோ—Pluto) போன்ற புதிய கிரகங்களைப் பற்றி எதுவும் தெரிந்து கொள்ளாதிருக்கின்றனர். பூமியும் ஒரு கிரகம் என்பதையும் இவர்கள் தெரிந்து கொள்ளாதிருக்கின்றனர்.

பன்னிரண்டு இராசிகள், 9 கிரகங்கள், 27 நட்சத்திரங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு ஜாதகம் கணிக்கப்பட்டு வருகின்றது. வருட முழுவதும் நட்சத்திரங்கள் குறிப்பிட்ட ஒரு நிலையிலேயே பூமிக்கு எதிரே இருந்து வருகின்றன. உலகம், சூரியனைச் சுற்றி வருவதால்தான் இந்த நட்சத்திரங்கள் மாறுவதைப்போன்று தோற்றமளிக்கின்றன. நட்சத்திரங்களின் தூரம் மாறினால்கூட, பூமி வட்டத்தின் குறுக்களவாகிய 18 கோடியே 40 லட்சம் மைல்கள் தான் மாறுகின்றன. ஆனால், நட்சத்திரங்கள் பூமிக்கு வெகு தொலைவிலிருப்பதால், இது அதிக வேற்றுமையைத் தராது. நமக்குச் சமீபத்திலுள்ள நட்சத்திரம் 3½ வெளிச்ச வருட தூரத்தில் (10ஐ 11 முறை பெருக்கி அதை 21ஆல் பெருக்கினால் கிடைக்கும் தொலைவு—அதாவது 21 லட்சம் கோடி மைல் தூரம்) இருக்கின்றது. நட்சத்திர மாற்றம் நமது வாழ்க்கையைப் பாதிக்கிறதென்று வைத்துக் கொண்டாலுங்கூட, நமது ஜோதிடர்கள் இவ்வளவு நுண்ணிய முறையில் கணிக்கத் திறமை பெற்றிருக்கிறார்களா என்பது சந்தேகமாகவே இருக்கிறது.

அபத்தக் கூற்று

'மைசிண்டியா' என்ற வாரச் சஞ்சிகை, அடிப்படையிலோ, அமைப்பிலோ, கணித முறையிலோ குறைகளிருந்தபோதிலுங்கூட, ஜோதிட சாஸ்திரம் பயனளிக்கத்தான் செய்கிறதென்று வாதிக்கிறது. ஆனால் இதுகூட கணித முறையில் தவறு இருந்துவருகிறதென்று ஒத்துக் கொள்கிறது. இத்தகைய அபத்த விவாதங்களும், புரட்டுகளும் நொண்டிச் சமாதானங்களும் இன்று சர்வசாதாரணமாகிவிட்டன. எதிர்காலத்தைப்பற்றி ஜோசியம் கூறும் நூற்றுக்கணக்கானவர்களில், ஒரு சில சமயங்களில் ஓரிருவர்தான் ஒன்றிரு விஷயங்களில் ஒத்த கருத்துக்கள் கூறுவதுண்டு. இப்படிப் பார்த்தாலுங்கூட,

...ில் ஒருவர்தான் சரியாக சில விஷயங்கள் கூறுகிறார் என்று தெரிகிறது. குழந்தை, ஆணா பெண்ணா என்று கூறுவதில் 50 சத விகிதத்தினர் வெற்றி பெறுவதுண்டு (?) குழந்தை, ஒன்று ஆணாக இருக்க வேண்டும் அல்லது பெண்ணாக இருக்கவேண்டும். எனவே, எவ்வாறு கூறினாலும் 50 சத விகித வெற்றி இருக்கத்தானே செய்யும்! மேலும், மனோதத்துவ இயலில் தோல்விகளை சீக்கிரம் மறந்து விடுவதும் வெற்றிகளை நினைவில் வைத்துக் கொள்வதும் சர்வ சாதாரணமாகி விடுகிறது. பல பொய்களின் மத்தியில் சில உண்மைகள் (உத்தேசமாகக் கூறியவை) நிலைத்து பொய்கள் மறைந்து விடுவதும் உண்டு. உண்மைகளைப் போல பொய்களையும் ஒன்று சேர்த்தால் அவைகளும் 'மலைபோல்' குவிந்து நிற்குமென்பதை பலர் மறந்து விடுகின்றனர்.

ஜோதிட சாஸ்திரத்தில் பொது மக்கள் பித்துப் பிடித்திருக்கிறனர். நன்கு கல்வி பயின்றவர்கள்கூட இதன் மயக்கத்திலிருந்து விடுபடவில்லை. பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இதனால் ஏராளமான பணம் சம்பாதிக்கின்றன. இந்தப் பழைய மூட நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஜோதிடர்களும் மக்களைச் சுரண்டி வருகின்றனர். பொது சமாதானத்திற்கும் அமைதிக்கும் ஜோதிட சாஸ்திரம் பெரிதும் இழுக்காக இருந்து வருகிறது. ஒன்றுமறியாத அப்பாவி மக்களை இந்த ஏமாற்றுக்காரர்கள் மோசம் செய்து விடுகின்றனர். ஜோதிட சாஸ்திரத்தின் மூலமாக தாங்கள் எதிர்காலத்தை கூறிவிட முடியுமென்று இவர்கள் பாமரர்களை நம்பும்படிச் செய்து இருக்கின்றனர். இந்தப் போலிஞானம், உண்மையானதென்று சில அறிவு தெளிவில்லாத ஜோதிடர்கள் எண்ணித் தொழில் செய்யக்கூடும். ஆனால், பெரும்பாலோர் மக்களின் பல ஹீனத்தையும், மூடநம்பிக்கையையும் சாதகப்படுத்திக் கொண்டு அவர்களை ஏமாற்றி வருகின்றனர் என்பதில் சந்தேகமில்லை.

புண்ணை மறைக்கப் புனுகா?

வேலை இல்லை! வேலை இல்லாததால் கூலி இல்லை!-கூலி இல்லாததால் கும்பியைக் கழுவக் கூழில்லை-என்று கூக்குரலிடுவோரின் தொகை பெருகிக்கொண்டிருக்கிறது.

பசி! பசி! என்போரின் தொகை, பாரத நாடெங்கும், குறிப்பாகத் தென்னாடெங்கும் பெருகிக் கொண்டே வருகிறது.

"பாஷாணம் சாப்பிட்டு, நடுவீதியிலே பிணமானான் - காரணம் பசியைப் போக்கிக்கொள்ள வழியில்லை"

"பசியின் கொடுமையால் தூக்கிட்டுக் கொண்டாள்."

"குடும்பத்தைக் காக்க வழியில்லாமல் குளத்திலே விழுந்தான்."

"நடந்து சென்று கொண்டிருக்கும்பொழுதே நடு வீதியில் இறந்தான்."

இப்படிப்பட்ட செய்திகளை நாம் நாள்தோறும் காணத் தவறுவதில்லை. காங்கிரசைத் தூற்றுவோரின் கட்டுக் கதை என காங்கிரஸ் அன்பர்கள் கூறுகிறார்கள்.

காங்கிரசைப் போற்றித் துதித்துப் புகழ்மாலை சூட்டும் 'தினமணி'யே இப்படிப்பட்ட செய்திகளைத் தந்திருக்கிறது என்பதை எவரும் மறக்கமுடியாது.

என்றாலுங்கூட, நிதி மந்திரி சுப்ரமண்யம் போன்ற சில காங்கிரஸ் 'னய'கள், 'நாட்டில் பட்டினிச் சாவு என்று படம் போடுகின்றார்கள்; உண்மையில் பட்டினியில் ஒருவரும் சாகவில்லை' என்று பச்சையாகப் புளுகி, நாட்டில் பஞ்சம் என்பதே கிடையாது என்று வாதாடுகிறார்கள்.

உண்மையில் பட்டினியால் ஒருவரும் சாகவில்லை என்று கூறிய அதே 'கனம்,' மற்றோர் தினம், அப்படிச் செத்திருந்தால் நூறு பேருக்குமேல் இருக்காது என்று கூறுகிறார்.

'நோய்வாய்ப்பட்டு ஆகாரம் உண்ண முடியாமல் எலும்புந் தோலுமாகிச் செத்தவர்களை பட்டினிச் சாவு என்கின்றனரே!'—என்று பிறிதோர் தினம் கூறுகிறார்.

பட்டினியால் சாகவில்லை.

அப்படிச் செத்திருந்தால் நூறு பேருக்குமேல் இருக்காது

நோய்வாய்ப்பட்டு எலும்புந்தோலு மாகிச் சாகிறவர்கள் — பட்டினிச் சாவு அல்ல

இல்லை என்று ஆரம்பித்தவர், இதற்குமேல் இராது, என்று கூறி, இப்படிச் சாகிறவர்கள், பட்டினிச் சாவு அல்ல என்று, வேளைக்கொரு விதமாக வியாக்கியானங்கள் செய்கிறார்.

வியாக்கியானங்களோடு நிற்கவில்லை, மந்திரியார், வினா ஒன்றினையும் வினவினார்: 'உங்கள் உறவினரில் எத்தனைபேர் பட்டினியால் இறந்திருக்கிறார்கள்!' என்று.

பட்டினியால் சாகிறவர்களைக் காப்பாற்ற பாதை அறியாத 'கனம்' பட்டினியால் உங்கள் உறவினரில் எத்தனைபேர் இறந்தார்கள் என்று கணக்கினைக் கேட்கிறார்.

அப்படிப் பட்டியலை நீட்டினால், செத்தாரைத் திருப்பித் தந்திடுவாரா?—ஏன் இந்தக் கணக்கினைக் கேட்கிறார். பட்டினியால், யாரும் சாகவில்லை என்று ருசப்படுத்தவாம்.

நம் நிதி மந்திரி அவர்களுக்கும், அவரது சகாக்களுக்கும் தென்கொரிய தேசீய அசெம்பிளி சபாநாயகர் பி. எச். ஷினிக்கி கூறுவதை காணிக்கையாக்குகிறோம்.

"இந்தியாவில் தினசரி அநேகர் பட்டினியால் செத்து வருகிறார்கள். இந்தியா தன் சொந்தப் பிரச்னைகளைத் தீர்த்துக்கொண்டால் போதும்"

என்றும், ஆசிய விவகாரங்களில் இந்தியா அணுகும் முறையை தென்கொரியா ஒப்புக்கொள்ளவில்லை என்றும், கொரியர் அரசியல் மகாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாதென்றும் அவர் கூறுகிறார்.

பட்டினியால் எவரும் சாகவில்லை என்று பசப்பித் திரியும் காங்கிரஸ் கண்யர்கள் ஷினிக்கியின் வார்த்தைக்கு என்ன பதில் கூறுவார்கள்?

பட்டினியால் மக்களைச் சாகடித்துக் கொண்டிருக்கும் நீங்கள், மற்ற நாட்டவர்களின் விவகாரங்களில் தலையிட அருகதை அற்றவர்கள் எனத் திட்டவட்டமாக அவர் தெரிவிக்கிறார்.

உங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக்

கொள்ளமுடியாத நீங்கள், மற்றவர்கள் பிரச்னைகளில் தலையிட இலாயக்கற்றவர்கள் என்று தென்கொரிய தேசிய அசெம்பிளி சபாநாயகர் கூறுகிறார்.

மற்ற நாட்டவர் கண்டு மனம் பதைக்கும் அளவுக்கு—மற்ற நாட்டவர் கேலி செய்யும் நிலைக்கு நாட்டினை நாசப்படுத்தி வைத்துவிட்டு, 'எங்கே கணக்குக் காட்டுங்கள், பட்டினியால் செத்தவர்களை' என்று கேட்பது, அரசியல் திறமையா?

வியாக்கியானங்களும் விளக்கங்களும் வேதனையைப் போக்காது. வேதனையை அகற்றும் வேலையைச் செய்யவேண்டும் அதுதான் விவேகமாகும்.

இல்லை
இவ்வளவுதான்
இப்படித்தான்

என்று கூறிக்கொண்டு, நாட்டில் பவனிவந்து விடுவதால், பட்டினியால் சாவோரின் தொகை குறைந்துவிடாது.

ஜனத்தொகை உயர்ந்துவிட்டது—அதற்குத் தக்கவாறு உற்பத்திப் பெருக்கம் இல்லை' — என்று முகாரி பாடினால், மற்றைய நாட்டவர்களால் முகத்தில் கரியைப் பூசி கொள்ளவேண்டியதுதான்.

ஏன், உற்பத்தில் பெருக்கம் இல்லை? யார் அதற்குத் தக்கபாதைகளை—வழிகளை அமைப்பது?...... எண்ணிப்பார்க்க வேண்டாமா — அரசியல் பீடத்திலே அமர்ந்துகொண்டவர்கள்.

எண்ணிப் பார்த்து, அதற்குத் தக்க செயல்களைச் செய்யவேண்டாமா? செயல்களைச் செய்வதில் சிந்தையைச் செலவிடாமல், சிங்காரமாக நாட்டில் உலவிவந்து 'பத்திரிகைகளின் பொய்ப்பிரசாரத்தை நம்ப வேண்டாம்' என்று கூறிவிட்டால் போதுமா?

இந்த நாட்டவரை, இனிய மொழி பேசி மயக்கிவிடுவதாலேயே உண்மை மறைந்து விடும் என்று எண்ணுவது ஏமாளித்தனமாகும்.

இங்கிருப்பவரை ஏய்த்துவிடலாம் - ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் காரணத்தால்- அதிகாரம் இருக்கும் காரணத்தால்.

ஆனால், மற்ற நாட்டவர்களின் நோக்கிலிருந்து தப்ப முடியாது, என்பதை ஷினிக்கியின் கூற்றிலிருந்தாவது அமைச்சாமூர்த்திகள்-காங்கிரஸ்காரர்கள் உணர்ந்துகொள்வார்களா?

எனவே, புண்ணைப் புனுகு பூசி மறைக்க எண்ணுவதைவிட, அதைப் போக்கும் வழியினைச் செய்யவேண்டும் - அதுதான் புத்திசாலித்தனமாகும் என்று கூறி எச்சரிக்க விரும்புகிறோம்.

☆

7-ம் பக்கத் தொடர்ச்சி

யில் அனுபவமில்லாதவரா? அவர் எந்தச் சுயநலத்தை அடிப்படையாகவைத்து ஆச்சாரியாரின் திட்டத்தை எதிர்க்கிறார்? கூற முடியுமா?

இதோ, இன்னொரு பேரறிஞர்-கல்வி இலாக்கா டைரக்டராகப் பணியாற்றி இப்போது ஓய்வு பெற்றுக்கொண்டிருப்பவர். டாக்டர் கே. என். கினி அவர்கள் ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வித் திட்டம் பயனற்றதென்று கூறுகிறார்.

"ஆரம்பக் கல்வித்திட்டத்தில் தொழிற் கல்வி சிறந்ததுதான். ஆனால், 6, 7 வயதுச் சிறுவர்கள் தொழில் செய்வதைப்பார்ப்பதால் ஒன்றும் நல்லபயன் வந்துவிடாது. தனியாகத் தொழில் கற்றுகொள்ள 11, 12 வயதாவது ஆகவேண்டும். அதிலும், நவீன இயந்திர சாதனங்கள் உபயோகிக்கும் பட்சத்தில், 15 வயதாவது ஆகவேண்டியது அவசியம். அப்பொழுதும், ஆசிரியர்கள் கண்காணிப்பும், தொழில் அதிபர்களின் கூட்டுறவும் வேண்டும்."

என்று, அண்மையில் சேலத்தில் ஒரு கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார். டாக்டர் கினி அவர்கள் கல்வித் துறையில் அனுபவப்பட்டவர் மட்டுமல்ல, கல்வி இலாக்காவுக்கே டைரக்டராக இருந்து பணியாற்றியவர். அப்படிப்பட்டவர் கூறுகிறார், ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வித் கூட்டம் பயன் அற்றது என்பதாக. ஆனால், ஆச்சாரியாருக்குச் சில கல்வி அனுபவமுள்ளவர்கள் அகப்பட்டிருக்கிறார்களாம்! அவர்கள் ஆச்சாரியாரின் திட்டம் அளவு கடந்த சிறப்புடையதென்று செப்புகிறார்களாம்! யார் அவர்கள்? விபரம் இல்லை! கல்வி டைரக்டர் ஒருவரைத் தவிர, மற்ற ஆதரவாளர்கள் யார்?—தெரியாது! போகட்டும்—ஏதோ தள்ளாதகாலத்தில் ஏற்பட்ட தடுமாற்றத்தின் காரணமாக அவருடைய கண்களில் படுபவர்கள் எல்லோரும் கல்வித்துறையில் அனுபவமுள்ளவர்களாகக் காட்சியளிக்கிறார்கள் போலும்! என்று கருதி மன்னித்து விடுவோம். ஆனால், இப்போது ஒரு புது முறையைக் கையாள முயல்கிறாரே! அது ஏன் என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. கல்வித்துறையில் அனுபவம் பெற்றவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொண்டுவரப்பட்ட திட்டத்தை அமுலாக்க, கிராமத்துக்கு ஒரு ஆள் தேவை என்ற புது ஆள் தேடும் படலத்தை ஏன் ஆச்சாரியார் இப்போது கையாள முன்வந்திருக்கிறார் என்பது புரியாத, ஒன்றாகவே இருக்கிறது. கிராமத்துக்கு ஒரு ஆள்வீதம் கிடைக்கக் கூடிய அந்த ஆசாமிகளுக்குப் படிப்புக்கூடத் தேவையில்லையாம். பெரிய தனக்காரர்போல் நடித்தாலே போதுமாம்! ஆச்சாரியாரின் ஆரம்பக்கல்வித்திட்டம் வெற்றியடைந்து விடுமாம்! வேதிய குலத் தலைவர் இதனை விவேகத்தோடு கூறுவதாக விமர்சனப்படுத்துகிறார். இதனை நாம் கேட்டுக்கொண்டு வாய்மூடிக் கிடக்கவேண்டுமாம்! முடியுமா? ☆

காஞ்சியில்
பொதுக்கூட்டம்

31-8-53 திங்கட்கிழமை மாலை
பெரிய காஞ்சிபுரம்
கீழண்டை இராசவீதியில்

புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை எதிர்த்து அறப்போரில் ஈடுபட்டு சிறைத் தண்டனை பெற்றுத் திரும்பும்

சி. வி. எம். அண்ணாமலை
அவர்களுக்கும்

அவருடன், அறப்போரிலீடுபட்டு சிறை சென்ற
தி. மு. க. தோழர்களுக்கும்
இரா. வெங்கடேசன் தலைமையில் வரவேற்பளிக்கப்படும்

அதுபோது, சி. பி. சிற்றரசு அவர்களும் மற்றும் பலர் சிறை சென்ற தோழர்களைப் பாராட்டிப் பேசுவர்.

சண்முகம் நினைவு மன்றத்தார்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

னுக்கு அந்த வட்டாரத்தில், அதிகச் செல்வாக்கும் பெற்றிருப்பவர் ஆச்சாரியார். நீதிபோதனைகளிலும், ஏனையமக்கள் எப்படி நடக்க வேண்டும் என்பதைப் பற்றியும், அனுதினமும், பிரசங்கமாரி பொழியும் இவர், தன்னுடைய கடைசிக்காலத்தில், நன்மைகளைச் செய்து செல்லத் துடிப்பதாகக் கூறுகிறார். அதனாலேயே, கல்வித்திட்டத்தைக் கொண்டு வந்ததாகவும், போகுமிடமெல்லாம்—தெரிவிக்கிறார்.

மக்கள் மன்றத்தில், பன்னெடும் நாட்களாக, அழியாமல் வளர்ந்து வரும், ஜாதிப் பாகுபாட்டை அழிக்கும் முதல் நிகழ்ச்சியாக, தம் மனோரை நூன்று கூட்டி, பூணூலை விட்டொழிக்கச் செய்வாரா? — 'நன்மை செய்யத் துடிக்கிறேன்', என்று அவர், கூறுவதால் கேட்கிறோம் — முன்வருவாரா! அரசு பீடத்தில் அமர்ந்திருக்கும் அவர், சட்டம் கொணர்ந்து, மனிதரிடையில் பேதத்தையுண்டு பண்ணிக் காட்டும், பூணூல்முறையை அழிக்க முயற்சியெடுப்பாரா!! தன்னைப் போல், பார்ப்பன மக்களின் தலைவர்களாக இன்று விளங்குவோரையெல்லாம் அழைத்து, 'பூணூலைக் கழற்ற'ச் சொல்லி — வற்புறுத்துவாரா!

ஏழைமக்கள்மீது — திராவிடப் பெருங்குடி மக்கள்மீது 'இ.' என்றால் சட்டங்களைக் கொண்டுவந்து, 'சீர்திருத்தம்' மலரப் பாடுபடுவதாகச் செப்பும் ஆச்சாரியார், சமுதாயத்தில் ஜாதித்திமிரின் சின்னமாக விளங்கும் பூணூலை அகற்றவும் — அணியாமல் தடுக்கவும் — செய்வாரா? பூத்துவரும் புதுயுகத்தின் சார்பில், ஆச்சாரியாரைக்கேட்கிறோம். துணிவுண்டா! செய்வாரா!!

★

அனுதாபம்

மேற்கு சென்னையில் சுயமரியாதை இயக்கம் வளர, மிகவும் பணியாற்றியவரும், திராவிட இயக்கத் தவருமான, தோழர் சி. ஏகாம்பரனார், 5—7—53ல் இயற்கை எய்திய செய்தி கேட்டு மிக வருந்துகிறோம். அவர்தம் குடும்பத்தாருக்கு நம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

"வட இந்தியப் பாஸிஸப் பேய் ஒழிக!"

[திரு. வி. க.]

காங்கிரஸ், ஏகாதிபத்ய பீடத்தில் அமருமுன், அதனைத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்தோரில் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களும் ஒருவர்.

தமிழ்க் குரலெழுப்பி சுதந்திரக் கனல்மூட்டிய அத்தலைவர்—இன்று ராயப்பேட்டை சாது அச்சுக்கூடத்திலே, நோய் வாய்ப்பட்டுக்கிடக்கிறார். அரியணையில் வீற்றிருக்கும் அவர் ஆச்சாரியாரைவிட, இன்றைய அரசியல தீரமேந்திகளை விட, திரு. வி. க. அவர்களுக்கு, இந்தியத் துணைகண்ட சுதந்திர வரலாற்றில், சிறப்பானதோர் இடம் உண்டு. ஆனால், சந்தர்ப்பபுழுதியால், 'ஏனோதானோக்கள்' எல்லாம் காங்கிரசுக்குள் கொட்டமடிக்க நேர்ந்ததால், திரு வி. க போன்றோரின், புகழ் மறைக்கப்பட்டுவிட்டது தமிழிலக்கிய வெள்ளம் அவர். ஆனால் தள்ளாத வயதில், அச்சுக்கூடத்துக்குள், தடியூன்றியவண்ணம், காலத்தை ஓட்ட வேண்டியவரானாரே தவிர, காங்கிரஸ்ஆட்சியால் கவுரவிக்கப்படவில்லை. 'அரசாங்கக் கவிகள்' எனும் போலித் திரையில், சிலருக்கு மரியாதையும் பணமும் தந்தது, காங்கிரஸ் சர்க்கார். தமிழ்க்கடலை மறந்தது! மறந்தது மட்டுமா? சிறையும் வைத்தது. 1947ம் ஆண்டு சென்னை பக்கிங்ஹாம் தொழிற்சாலைப் பாட்டாளி மக்கள் உரிமைக் குரலை எழுப்பிய போது, காங்கிரஸ் ராஜ்யம் திரு. வி. க. அவர்களை வீட்டிலேயே காவலில் வைத்தது. சாது, அவர்! அவர் மீதும் தன் அதிகாரத்தைச் செலுத்திக் காண்பித்தது, இந்த ஆட்சி!! எழுந்தால், போலீஸ்! படுத்தால் போலீஸ்! யாராவது வெளியில் வந்தால் போலீஸ்! உள்ளே சென்றால் போலீஸ்!—இவ்விதம் திரு. வி. க. வீட்டைச் சுற்றி போலீஸ் மயம். அவரது, தனிமையைக் குலைத்து, அநாகரீகமான முறையில் ஆட்சிபிடி செய்தது, சென்னை அரசாங்கம்.

இந்தக் கொடுமையைக் கண்ட, தமிழ்ச் செல்வமாம் பெரியார் திரு. வி. க. அவர்கள் சிந்தை நொந்து தீட்டிய கட்டுரையின் சில பகுதிகளே—இவை. தலைப்பும், அவரே தந்தது. தோழர் ம. பொ. சிவஞானம் அப்போது நடத்திய, 'தமிழ் முரசு' இதழ் 14வது வெளியீட்டின் 30வது பக்கத்தில் வெளிவந்துள்ளது.

"ஒரு திங்கள் எனது உடல் வீட்டுக்காப்பில் இருந்தது அக்காப்பு இப்போது அவிழ்ந்தது. முன்னையதில், துன்பமோ, பின்னையதில் இன்பமோ விளையவில்லை........

எனது உடலையும், மற்றத்தோழர்கள் உடலங்களையும் முதல் முதல் நாட்டில் தோன்றிய ஒரு தொழிற்சங்கத்தையும் காப்பில் வைத்தது எது? சென்னை ஆட்சியா? அன்று. அன்று. இவ்வாட்சி ஒரு முன்னிலைச்சுட்டே. பின்னைக்காப்புக்குஆதி மூலம் எது? வடஇந்தியப் பாஸிஸப் பேய்.

இப்பேய் வெளிப்படையாக நாட்டில் 1930ம் ஆண்டில் நுழைந்தது. அப்பொழுதே காலஞ் சென்ற என் அருமைத் தலைவர் திரு. எஸ் சீனிவாசய்யங்கார் (அக்கால காங்கிரஸ் தலைவர்) எச்சரிக்கை செய்தார். பண்டித நேரு தமது சோஷியலிசத்தை வலியுறுத்தாதிருந்தது இந்நாளில் தீங்கு விளைவித்திருக்கிறது. அன்று முதல் பாஸிஸம் படிப்படியே ஆக்கம் பெற்றது. இப்போது அது தொழிலாளர் இயக்கத்தையே விழுங்க முனைந்திருக்கிறது.

பாஸிஸம் வடநாட்டைப் பாழ்படுத்தியது, இப்போது தென்னாட்டின்மீது பாய்ந்திருக்கிறது. இதற்குரிய கால்கோள் விழாவை, எனது மெலிய உடல், வீட்டில் அடைப்பட்டபின்னர், தொழிலாளர் வட்டங்களில் மீறிய அட்டூழியங்கள் நிகழ்த்திவிட்டன. திக்கற்ற ஏழை மக்கள் பட்டபாடுகள் என் செவிக்கு எட்டின. என் உடல், ஊன், உள்ளம் எல்லாம் உருகின. கிறிஸ்துபெருமானின் சிலுவைக் கோலம் என் நெஞ்சில் நின்று என்னைக் காத்தது."

★ மக்கள் தீர்ப்பு! ★

'நிற்பவர், படையாச்சி ஜாதி'

'அப்படியா? மாணிக்கவேலை அனுப்புகிறேன்.'

'சபாஷ்! ஜெயித்துவிட்டோம்!'

✱

'தாங்கள் செய்த நன்மைகளைப் பற்றியும் — தங்களுடைய அகில உலகப் பெருமைகளைப்பற்றியும் வானளாவப் புகழ்ந்து பேசவும் ஒருவர் வேண்டும்'

'ஓ! நான், 'அனுமார்! அனுமார்!' என்று அடிக்கடி சொல்வேனே, சுப்ரமணியம்—நிதி மந்திரி--போதுமல்லவா?'

'சபாஷ்! ஜெயம் நமக்கே! நமக்கே!'

✱

'காரசாரமாக இந்தக் கழகத்து ஆசாமிகளைப்பற்றி, கன்னாபின்னாவென்று தாக்கிப் பேசவும், சிலர், தேவை!'

'சிலரா? நிறைய இருக்கிறார்கள்! செல்—அழைத்துச் செல்.'

'ஜெயத்தைக் கொண்டுவருகிறேன்! கொண்டுவருகிறேன்!'

✱

இத்தகைய, மும்முரங்களோடு, விருத்தாசலம் உபதேர்தலுக்கு, ஆயத்தம் செய்தனர், ஆளும் கட்சியினர். ஆங்காங்கு, மாணிக்கவேலரை அழைத்துச்சென்று 'புகழ் புராணம்' ஓதும்படிச் செய்தனர்—சுப்ரமணியத்தைக் கொண்டு சென்று 'ஸ்தோத்திர'ப்பாராயணம் செய்தனர்—காமராஜரும் சென்றார்; தெரிந்தவரையில் பேசினார்—காங்கிரஸ் கூடாரத்துக்குள். பிரசாரகனாயிருப்பதால் 'கார்ப்பரேஷன்'பதவியும் ஆட்சியாளர் பார்வையும் அடிக்கடி பெறும் 'ஆனந்தங்களும்' சென்றனர்—பணம் பவனிவந்தது! வீதிகள், ஒலிபெருக்கிகளால் அதிர்ந்தன! மாநில காங்கிரஸ் கட்சியே வரிந்துகட்டிக்கொண்டு வேலை செய்தது! காங்கிரஸ் கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்ட தோழர் நாராயணசாமி — இரண்டிலொன்று என்று முன்பு தோற்றதைமனதில் எண்ணி — இருந்ததையும், பெற்றதையும், எடுத்தெடுத்து வீசினார். நாட்டின் நாலுபக்கங்களிலிருந்து, பலரைக் கொண்டுவந்து, தேர்தல் வேலைகளில் ஈடுபட்டார். அவரை எதிர்த்துநின்றஉழைப்பாளர்கட்சித் தோழர் சாமிக்கண்ணுவோ, வசதிகளற்றவர், அவரது உழைப்பாளர் கட்சியோ, அகில உலகக் கட்சியல்ல —பத்திரிகைப்பலம் பெற்றதுமல்ல —பணபலம் பெற்றதுமல்ல. தோழர்கள் எஸ். எஸ். ராமசாமி, அரங்கநாதன், ராதாகிருஷ்ணன் போன்ற, ஆர்வமிக்க சிலரே, தேர்தல் காரியங்களையெல்லாம் கவனித்தனர். அவர்களுக்குப் பக்கபலமாகயிருந்தது, பணமல்ல— பிரசாரப்பீரங்கியுமல்ல —தி. மு. க-வின், தொண்டர்கள்! அவர்களை ஆதரித்து, மக்கள் மன்றத்தில் காங்கிரசின் வெறியாட்டத்தை, வீதிகள்தோறும் முழக்கியோர், மந்திரிகளல்ல — சீமான்களல்ல — சாதாரணமானவர்கள்; தி. மு. க-வின் தொண்டர்கள். இருந்தும், காங்கிரஸ் தோற்றது! சாமிக்கண்ணு வெற்றிபெற்றார்!! விருத்தாசலம் உபதேர்தலில் — தி. மு. க. தலைவர்கள் நேரிடையாகக் கலந்துகொள்ளமுடியவில்லை, ஆச்சாரியார் வழங்கிய அடக்குமுறைகள், காரணமாக—ஆயினும், அங்குள்ள கிளைக் கழகங்களுக்கு, அறிக்கைகள் அனுப்பினர் — நண்பர் எஸ். எஸ். ஆர். விருப்பப்படி 'நம்நாடு' தன் ஆதரவைத் தீட்டிற்று — அவ்வளவுதான்! இருந்தும், இந்த ஆதரவு, ஆளும் கட்சியின் அபேட்சகரைத் தோற்கடித்து, உழைப்பாளர் பிரதிநிதிக்கு, வெற்றியைத் தேடித்தந்திருக்கிறது.

✱

இந்த வெற்றியைப்பற்றி சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய அன்பர் ஆச்சாரியார், கூறாமல் கூறியிருக்கிறார், ஒரு விளக்கம். 'தேர்தல்களில் வெற்றியும் தோல்வியும் சாதாரணம். இதை எடுத்து வைத்துகொண்டு, பேசுவது, பொருத்தமல்ல' என்பதாக. இதே, ஆச்சாரியார்தான், விருதுநகரில் காங்கிரஸ் வெற்றிபெற்றதும், முரசு கொட்டினார்! 'என் ஆட்சியை மக்கள் அங்கீகரிக்கிறார்கள்' என்றார். ஏடுகள், பரவசமாக எழுதின. இறுமாப்போடு, நின்றார். அந்த உபதேர்தலைமட்டுமல்ல — அதற்கு முன் நடைபெற்ற ஒவ்வொரு உபதேர்தல்களிலும், 'தன்னுடைய ஆட்சியை அங்கீகரிக்கும் தேர்தல்' என்றே, குறிப்பிட்டார். அங்ஙனம் கூறி, அருப்புக்கோட்டை பார்லிமெண்டு தேர்தலில்; ஈடுபட்டார்— மூக்கறுந்தது! காங்கிரஸ் தோற்றது!!

ஜெயித்தால் துந்துபி! தோற்றால் மௌனம்!! இதுவே, ஆச்சாரியாரின் போக்காகயிருந்துவருவதால், விருத்தாசலம் வீழ்ச்சி குறித்து, அவர் வெளியிட்ட வார்த்தைகளைப் பற்றி நாம், கவலைப்படவில்லை.

ஆனால், விருத்தாசலம் உபதேர்தல், நடைபெற்ற நேரம் எத்தகையது என்பதை, நாம் கவனிக்க வேண்டும் — நம்முடைய அபேட்சகர் சார்பில் ஆங்காங்கு பேசியோரும் 'இந்த நேரத்தை'த்தான் மக்களிடம் எடுத்துச் சொன்னதாக அறிகிறோம். சிறை! துப்பாக்கி! தலைவர்கள்மீது வழக்கு! கருணாநிதி போன்றோருக்கு ஆறுமாதம்! ஆச்சாரியாரின் அட்டகாசம்! புதுக்கல்வித்திட்டம்! — இத்தனையும்தான், நம் சார்பில். மக்கள் மன்றத்திடம் எடுத்துக் கூறப்பட்டது.

அவர்கள் சார்பிலோ, ஆச்சாரியார் புகழ்! அவருடைய மேதாவிலாசம், புதுக் கல்வித் திட்டத்தின் பெருமை! காங்கிரசின் சக்தி அதுவே, நாட்டையாளும் எனும் விளக்கம்! அதனுடைய தலைவர் பண்டிதருக்கு உலகிலுள்ள புகழ் காங்கிரசின் சரித்திரம்!—இவைகள் யாவும், எடுத்துச் சொல்லப்பட்டன.

இரண்டையும் கேட்டனர், மக்கள்—தமது தீர்ப்பை அளித்தனர்- 'ஆச்சாரியாரின் கட்சி அநீதியானது' என்று விருத்தாசலம் தொகுதி மக்கள், தீர்ப்பு அளித்திருக்கின்றனர். இம் முறை மட்டுமல்ல, முன்பு நண்பர் பரமசிவம் அவர்கள் நின்று, உழைப்பாளர் கட்சிப் பிரதிநியாகயிருந்து M-L-A-வாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போதும், இவ்வண்ணமே, ஆதரவு தந்தனர்—மக்கள். இன்று தோற்ற காங்கிரஸ் அபேட்சகரே, அன்றும் தோற்றார்.

ஆனல், பரமசிவத்தின் தேர்தல் செல்லாதென்று கூறி, வழக்குத் தொடர்ந்து மறு தேர்தலில் ஈடுபட்டது, காங்கிரஸ் கட்சி. மறுதேர்தல் வந்தால், எப்படியாவது, சாம-தான-பேத-தண்டத்தைக் காட்டி, வெற்றிபெறலாம் என்பதுதான் கருத்து. இது, 'விருதுநகரில்'பலித்தது! விருத்தாசலத்தில் பலிக்கவில்லை!! காரணம், கட்டிமேடு தோழர் பரமசிவத்துக்குப் பதில் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர், அவரைப் போன்றே, முன்னேற்றக் கொள்கைகளில் ஈடுபட்டவராகவும், காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை எதிர்ப்பவராகவும் இருக்கவேண்டுமென்பதுதான் அந்தத் தொகுதி மக்களின் ஆசை. இந்த உறுதியை, உழைப்பாளர் கட்சி, தெரிவித்தது —வெற்றி பெற்றிருக்கிறது. இதனை ஆளும் கட்சிக்கு, எடுத்துரைக்க விரும்புகிறேம். ஆச்சாரியாரின் கொடுமைக்கு மக்கள் மன்றம்,வழங்கிய தீர்ப்புதான் — விருத்தாசலம் தேர்தல். அவருடைய சாகசங்கள்—மாணிக்கவேலர்களை சிருஷ்டிக்கும் தந்திரம்—விருத்தாசலம் தொகுதியில், சாகடிக்கப்பட்டிருக்கிறது. இதனை, அவர் குழாம், உணரவேண்டும். அன்புக்கும் கண்ணியத்துக்குமே, தமிழகத்து மக்கள், தலை வணங்குவார்கள்! அட்டகாசத்துக்கும் சாணக்கியமுறைக்கும் அடிபணிந்த தமிழகம் அல்ல. இன்று, இருப்பது!!

இது, தாழ்ந்த தமிழகம் அல்ல—எழுச்சி பெற்றுவிட்ட தாயகம்.

இதனை, விளக்குவதுதான்,விருத்தாசலம் வெற்றி. தோழர் சாமிக்கண்ணு எம். எல். ஏ. வையும், அவர் எம். எல். ஏ.வாக, பாடுபட்ட தோழர்களையும் வாழ்த்துகிறேம்—பாராட்டுகிறேம்.

★

"மத விஷயங்களை முன் நிறுத்தி கடவுள் நம்மைப் பரிசீலனை செய்யமாட்டான், நமது செயல்களை முன் நிறுத்தியே நம்மைப் பரிசீலனை செய்வான் என்று நம்பக்கூடியவன் இந்த உலகத்தில் ஒருவனாவது உண்டா?"

—வால்டையர்.

1-9-1953

வெட்கக்கேடு!

அசெம்பிளியில் பெருவாரியான ஓட்டுகள்மூலம் ஏற்கப்படும் பொது ஜனக்கோரிக்கைகளை யதேச்சாதிகார சர்க்கார் நிராகரிக்கக்கூடாது.

*

மக்களின் பிரதிநிதிகள் நிராகரிக்கும் திட்டங்களை சர்க்கார் யதேச்சாதிகாரமாக அமுலுக்குக்கொண்டு வரலாகாது.

*

1892ம் ஆண்டு! காங்கிரஸ் மகாசபை ஆரம்பிக்கப்பட்டு, ஏழாண்டுகளுக்குப்பின்!!—மேலே குறிக்கப்பட்ட கோரிக்கைகள், வெள்ளையன் முன் நீட்டப்பட்டன. சட்டசபைகள் என்றல், இப்போதுள்ளது போன்ற சட்டசபைகள் அல்ல. பெருப்பாலும், வசதி பெற்றேர் அமரும், வாய்ப்பைப் பெற்றிருந்த சபைகள். அவைகளின் முடிவுகளை, ஆங்கிலேய ஏகாதிபத்யம், மீறக்கூடாது என்று அக்கால காங்கிரஸ், அடிக்கடி தீர்மானங்கள், போட்டு வந்தது. இந்தக்கட்டத்தை, 'மிதவாத காலம்' என்று காங்கிரஸ் சரித்திர ஏடுகள், குறிப்பிட்டுள்ளன. வெள்ளையன்முன் வேண்டுகோள் விடுப்பதா? — என்று தேசிய வாலிபர்கள், சீறியகாலம்,அது. எனினும் தாதாபாய்நௌரோஜி போன்றேர், இந்தக் கோரிக்கைகள் எவ்வளவு தூரம், ஏகாதிபத்யத்தின்செருக்கை அடக்க உதவும் என்பதை அறிந்திருந்தனர். அதனலேயே, இம்மிதவாதக் கோரிக்கைகளை வலியுறுத்தினார்கள்.

மக்களுக்கு 'மயிரிழை' அதிகாரமாவது, கிடைக்கவேண்டும்— இது கிடைப்பது, சுயராஜ்யப் போரில ஒரு வெற்றிக்கட்டம் — கிடைக்காவிடில், அது ஆங்கில ஏகாதிபத்யத்தின் அதிகார ஆசையை உலகுக்கு எடுத்துக் காட்டும், என்றெல்லாம், அவர்கள் விளக்கம் தந்தார்கள்.

இன்று! 1953ல்!! — காங்கிரஸ் ஆட்சியைத் திரும்பிப்பார்க்கிறேம். எந்த உரிமைகளை ஆங்கிலேயனிடமிருந்து பெறவேண்டுமென்று காங்கிரஸ் போராடியதோ, அதே குறிக்கோள்கள், மிதித்துத் துவைக்கப்படுகின்றன.

*

அசெம்பிளியில் பெருவாரியான ஓட்டுகள்மூலம் ஏற்கப்படும் பொது ஜனக் கோரிக்கைகளை, காங்கிரஸ் சர்க்கார் நிராகரித்துவிடட்டது.

மக்களின் பிரதிநிதிகள் நிராகரிக்கும் திட்டங்களை சர்க்கார் எதேச்சாதிகாரமாக அமுல் நடத்துகிறது.

*

காண்கிறேம், இக்காட்சியை இந்தியத் துணைகண்டத்தின், விடுதலை முழக்கம் ஆரம்பிக்கப்பட்ட பீடத்தையே, நாசமாக்குகிறது ஆச்சாரியார் ஆட்சி.

*

அன்று காங்கிரஸ் கேட்டது! இன்று 'காங்கிரஸ்' போர்வைதாரி, அழிக்கிறர்!!

மக்கள் குரலுக்கு மகிமையை உண்டாக்கித்தர வேண்டுமெனும் கருத்தில், கண்ணீர்விட்டு தேசிய இயக்கத்தை வளர்த்த தியாகிகள், 'சட்டசபையின் தீர்ப்பை வெள்ளை சர்க்கார் மதிக்கவேண்டும்' என்றனர். இந்த உரிமையைப் பெறப் போராடிப் போராடி, உழைத்து உழைத்துப் பெற்றனர்.

ஆனல், இன்றே! அதே உரிமையை வெகு ஆணவத்தோடு, அழிக்கிறர், அன்பர் ஆச்சாரியார்.

அவர் கொண்டுவந்த புதிய கல்வித் திட்டத்தை தற்காலிகமாக நிறுத்திவைத்து நிபுணர்களின் பரிசீலனைக்கு விடவேண்டுமென்று, சென்னை சட்டசபை, தீர்ப்பளித்தது.

தீர்ப்பை, மதிக்கவேண்டியவர்—ஏடாகூடங்களைச் சிருஷ்டிக்கிறர்—மமதைத்தேர் ஏறி, மக்களைநோக்கி

அதிகாரச் சாட்டையை வீசுகிறார்.

அரும்புக் கட்டத்திலிருந்த காங்கிரஸ், இந்த உரிமையைப் பெறுவதே தன்னுடைய ஜீவதாரமான முழக்கம் என்று கருதியது.

உதிரும் கட்டத்திலிருக்கும் ஆச்சாரியார், இந்த உரிமைகளையெல்லாம் மீறக்கூடிய அந்தஸ்து பெற்றவர்தான் என்று கருதுகிறார்.

அதன் விளைவாக, மாதம் இரண்டாகியும், மக்கள் சபையின் தீர்ப்பை மதியாமல் — மக்கள் மன்றத்தை மண்டூகங்கள் நிரம்பிய குளம் என்று நினைத்து — தன்னுடைய இஷ்டபரிவாரங்களை ஏவி, கூட்டங்கள் போடவும், மாநாடுகள் கூட்டவுமான, விசித்திர வேலைகளில் ஈடுபடுகிறார்.

உயிர் போய், பாடையிலேற்றப் பட்டவனை, 'பாரீர்! எவ்வளவு அழகன்!' என்று ஊர் மன்றத்தில் நிறுத்தி, அலங்காரமாக வர்ணிப்பதுபோல், மக்கள் மன்றம் உதறித் தள்ளிய கல்வித் திட்டத்தைப்பற்றி வானளாவப் புகழ்கிறார்.

இந்தப் புகழ்ச்சிக்கூத்து, கடந்த வாரம் செங்கற்பட்டில் நடைபெற்றதாம்— அவரது 'திருச்சேனை'க்குக் கிடைத்திருக்கும் சில, புது 'கிராக்கி'களின் ஒத்துழைப்புடன்.

மாநாடு நடைபெறுவதும், 'எடுபிடி'களைத் தயாரிப்பதும், பிரசங்கம் செய்வதும் குறித்து, நமக்குக் கவலையில்லை. மக்கள் மன்றம், ஆச்சாரியாரை அறியும். அவரது, சிஷ்யப் பரம்பரையையு நன்ருக அறியும்.

மக்களின் முடிவை அலட்சியப் படுத்திவிட்டு துணிந்து மேலும் அந்தக் கல்வித்திட்டப்பற்றி விளக்கம் தர முயல்கிறாரே, அதுதான் விசித்திரமாயிருக்கிறது.

சட்டசபையில் ஓட்டுக்கள் போடும் கட்டம் வருவதற்கு முன்பே, ஆச்சாரியார் தன் பிரசங்கங்களைச் செய்து, அவர்களின் ஆதரவைப் பெற்றிருக்கலாம். ஆட்சேபிப்பார், யாருமில்லை.

ஆனால், அவரது, திட்டம் நாட்டுக்கு ஏற்றதல்ல, என்று சட்டசபை முடிவு செய்ததும், இவர் செய்யவேண்டிய காரியம் என்ன? செய்தாரா! சட்டசபையின் முடிவை ஏற்றாரா!!

முதலையும் மூர்க்கனும் பிடித்த பிடியை விடார்! — என்றோர் பழமொழி உண்டு. அதைப்போல், ஆச்சாரியார் நடந்துகொள்கிறார். தான் ஓர் வயதானவன்—நாட்டிலிருப்போரெல்லாம் தன்னைவிட வயதில் இளையவர்கள் — வயதான நான் செய்யும் காரியங்களை அவர்கள் எல்லாம் ஏற்கத்தான் வேண்டும்—என்று, மமதையுடன் மார்தட்டுகிறாரே தவிர, மக்கள் குரலுக்கு மதிப்பளிக்கவில்லை.

கூட்டங்கள் பேசுவதும், 'விநாயகங்களைத் தயாரிப்பதும், அரசியல் அதிகாரத்தைப் பெற்றிருக்கும், ஆச்சாரியாருக்கு கஷ்டமான காரியமல்ல. செய்யலாம்—செய்யட்டும்.

ஆனால், அந்த நாள் காங்கிரஸ், எந்தப் பிரச்னையைத் தன் சுதந்திரப் பாதைக்கு உரியதெனத் தேர்ந்தெடுத்ததோ, அந்தப் பிரச்னையின் குரல்வளையைப்பிடித்துக் கொன்றுவிட்டுக் கூத்தாடுகிறார் என்பதை, காங்கிரஸ் நண்பர்கள், கவனிக்க வேண்டும்.

காங்கிரஸ் தலைவர்கள், செங்கற்பட்டுக் கூட்டத்தில், கலந்துகொண்டதாகத் தெரியவில்லை. ஆனால், 'போ! போ!' என விரட்டியடிக்கப் படுவோரும், 'எனக்கோர் இடம்' என்ற இடம் தேடிகளும், அங்கே, கூடிப் பேசியிருக்கிறார்கள். அத்தகையவர்களின், ஆதரவில்தான், ஆச்சாரியாரின் தெப்பம் மிதக்கிறது! நாடு, இதனை, நன்ருக அறியும்!!

ஆச்சாரியாரின் போக்கைப் பார்க்கும்போது, காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளைக் கொத்தி எரியும், கழுகின் நினைவே, வருகிறது. காங்கிரஸ், அன்று கூறியது வெள்ளையனைகேட்டது— "சட்டசபையின் முடிவை எதேச்சாதிகார சர்க்கார் நிராகரிகக் கூடாது" என்று. இதனைப் பெற, பல ஆண்டுகள், இங்கிலீஷ்காரனோடு போராடியது. இன்றோ! 'சட்டசபையின் முடிவை நிராகரிக்கிறேன்' என்று ஆச்சாரியார் கூறுகிறார்.

வெள்ளையன், அந்நியன். இவரோ இந்த நாட்டுப் பிரஜை. இவர், இவ்வண்ணம் ஏறுமாருக நடக்கிறார் காரணம், இவரைத் தட்டிக்கேட்க ஆளில்லையெனும் தைரியம் — எடுபிடிகளை வைத்துக்கொண்டு எதையும் சாதித்துக்கொள்ளலாம் என்கிற துணிவு.

"காங்கிரசே! — இத்தகைய 'கடும் பொதுஜன விரோதி'களின், பொக்கிஷமர்வாகவா, நீ ஆகவேண்டும்?" என்று பாரதியின் பாடலைக் கையிலும், காந்தியாரின் உருவத்தை நெஞ்சிலும் ஏந்திய, காங்கிரஸ் தியாகி, கண்ணீர் வடிக்கவேண்டிய கட்டம். அதனால்தான், 'எடுபிடி'களைத் தவிர, எவரும் செங்கற்பட்டுக் கூட்டத்தில், பங்கேற்கவில்லையென நினைக்கிறோம்.

சொந்தக் கட்சியையும் மதிப்பதில்லை! மாற்றுக் கட்சிகளை மட்டந் தட்டிடலாம் எனும் மனோதைரியத்தில் அவைகளையும் மதிப்பதில்லை!!

இத்தகைய ஒரு மனிதர் — உலவுகிறார்! மமதையோடு உலவுகிறார்!! காங்கிரஸ் தோழர்கள், கட்சி மாச்சரியம் மறந்து — சிந்தித்துப் பாருங்கள்.

1892!-1953!!—காங்கிரஸின் கண்யத்தை வளர்க்கப் பாடுபட்ட, தாதாபாய்நௌரோஜி போன்ற தலைவர்களை ஒரு முறை நினைத்துக் கொண்டு—தருக்குக்கொண்டலையும் இவரை, நினைத்துப் பாருங்கள். கண்ணீர்விட்டு வளர்த்த காங்கிரசின் நிலையையும், 'காட்டுராஜா' தர்பார் நடாத்தத் துடிக்கும் இவரையும் எண்ணிப்பாருங்கள்!

☆

தமிழர்கள் ஜாதிகளை அடியோடு அழித்து ஆழக் குழி வெட்டி அதைப் புதைக்கவேண்டும். பரம்பரை என்று பிதற்றிக்கொண்டிருக்கலாகாது. உலகப் போக்கின் வகையைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

அதிருஷ்டம், காலம், வினைப்பயன் முதலியவைகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு, சோம்பலைப் போக்கிக்கொண்டு உழைக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். மனிதப் பண்பு இன்னதென்று கண்டுபிடிக்க வேண்டும்.

வ. ரா.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.